Registered as a News Paper பக்கங்கள் 08 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 05 (21 - 08 - 1992) வெள்ளிக்கிழமை ஓசை 185

## செய்தியாளர் மாநாடு; நிருபர்கள் பகிஷ்கரிப்பு

கொழும்பில் அரசு வாராந்தம் நடத்தும் செய்தியாளர் மாநாட்டிலிருந்து நேற்று உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகையாளர் வெளிநடப்புச் செய்தனர். இருபதுக்கும் அதிகமான பத்திரிகையாளர் மாநாட்டைப் பகிஷ்கரித்து வெளிநடப்புச் செய்ததாக தெரிவிக்கப்படுகிறது பத்திரிகையாளர் மீது அண்மையில் கொழும்பு புகையிரத நிலையத்தில் நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் [8 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். குடாநாட்டு யுத்தம் வெடித்தது

# விமான, எறிகணை தாக்குதலுடன்

# இரு முனைகளில் ராணுவ நகர்வு

## பல இடங்களில் கடும் மோதல் இளவாலை பகுதியில் படை தரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் மீதான பாரிய தாக்குதல் நடவடிக்கை நேற்று காலை சிறிலங்கா இராணுவத்தினரால் ஆரம்பிக்கப்பட்டது. வலி வடக்கில் தெல்லிப்பழை சேந்தான்குளம் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் இரு முனைகளில் வெளியேறினர். தெல்லிப்பழையிலிருந்து மேற்கு நோக்கியும், சேந்தான்குளத்திலிருந்து தெற்கு நோக்கியும் விமானப்படையினர் கடற்படையினரின் உதவியுடன் வெளியேறி வந்த இராணுவத்தினரை தடுத்து நிறுத்தி விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர். தற்பொழுது இராணுவத்தினர் இளவாலைப் பகுதியிலும் மாரீசன் கூடலிலும் தரித்து நிற்பதாக தெரியவருகிறது.

நேற்றுக்காலை5-30மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட மோதல்கள் மாலை 6-30 மணிவரை தொடர்ந்து நடைபெற்ற வண்ணமிருந்தன.

முன்னேறி வந்த இராணுவத்தினருக்கு உதவியாக இரு உலங்கு வானூர்திகளும் இரண்டு குண்டு வீச்சு விமானங்களும் தொடர்ச்சியான தாக்குதல்களைநடாத்தின. வடக்குக் கடற்பரப்பில் தரித்து நின்ற பீரங்கிப்படகுகள்பலத்த பீரங்கித்தாக்குதல்களைநடாத்தின

### "ஒப்பரேசன் பூமியதிர்ச்சி"

யாழ் குடாநாட்டின் மீது "ஒப்பரேசன் பூமியதிர்ச்சி" எனும் பெயரில் பெரும் இராணுவ நடவடிக்கைஒன்று நேற்றுக்காலை6.15மணிக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமையலுவலக பேச்சாளர் கேர்ணல் சரத்முனசிங்க நேற்று (8 ஆம் பக்கம் பார்க்க)

## பெருமளவு மக்கள் இடம்பெயர்வு

(நமது நிருபர்)

சிறிலங்கா முப்படைகளும் இணைந்து வலிகாமம்வடக்குப் பகுதி மக்கள் வாழ்விடங்களைக் குறியாகக் கொண்டு நேற்று முழுவதும் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதல்களினால் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாக சொந்த இடங்களைவிட்டு வெளியேறியுள்ளனர். பல இலட்சக் கணக்கான சொத்துக்கள் நாசமடைந்துள்ளன. நேற்று அதிகாலை 6 மணிக்கு மாதகல் பகுதியை வட்டமிட்ட இரண்டு அவ்ரோ விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களைநடத்தின இதனைத் தொடர்ந்து சிந்திப்பந்தல் அகதிமுகாம் மீது மேற்கொண்ட தாக்குதலினால் அருகிலிருந்த குடிசை ஒன்று தீப்பற்றியது. இத்தாக்குதலில் சில பொதுமக்கள் காயமடைந்தனர்.

மீண்டும் நண்பகல் 12.15 இற்கு இளவாலைப் பகுதியை வட்டமிட்ட இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் மூன்று குண்டுகளை வீசின. இதனால் முள்ளானை, இளவாலை, சேந்தான் குளப் பகுதியில் சில வீடுகள் சேதமடைந்தன.

இறுதியாக மாலை 6 15 மணிக்கு விளான் பகுதியை வட்டமிட்ட இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் மூன்று குண்டுகளை வீசியதுடன், எறிகணை மற்றும் கலிபர் தாக்குதல்களையும் நடாத்தியது.

இத்தாக்குதல்களின் போது பிள்ளையார்கோவில்சுவர்கள், (8 ஆம் பக்கம் பார்க்க)

## 5 பொதுமக்கள் பலி 20 பேர் படுகாயம்

வலிகாமம் வடக்கின் பல பாகங்களிலும் நேற்று முழுவதும் சிறிலங்கா முப்படைகளும் இணைந்து மக்கள் குடியிருப்புகள்மீது மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதல்களில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பதுடன் இருபதிற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இளவாலையைச் சேர்ந்த சந்திரன் (வயது45), அளவெட்டியைச்சேர்ந்த கணேஸ்(வயது 41), ஜோன்சன் சுதர்சன் (வயது 14), பன்னாலையைச் சேர்ந்த அழகரத்தினம் குணரத்தினம் (வயது 38), ஆகியோர் உட்பட அடையாளம் காணப்படாத ஒரு பெண் ஆகியோர் நேற்றைய தாக்குதலின்போது கொல்லப்பட்டனர்.

சந்திரன் என்பவர் வாதமடக்கிப்பகுதியில் எறிகணைத் தாக்குதலில் காயமடைந்து அந்த இடத்திலேயே மரணமடைந்துள்ளார். இவரது சடலம் இதுவரை மீட்கப்படவில்லை. இவர் குரும்பசிட்டிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து மேற்படி பகுதியில் வசித்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி ஐந்து பேரும் கொல்லப்பட்டது உறுதிப் (8 ஆம் பக்கம் பார்க்க)

## பல இளைஞர்கள் இராணுவத்தால் கைது

[நமது நிருபர்]

வலிகாமம் வடக்கில் நேற்று அதிகாலை சிறிலங்கா இராணுவம்மேற்கொண்ட திடீர்சுற்றிவளைப்பின் போது பல அப்பாவிப் பொதுமக்களும் இளைஞர்களும் அகப்பட்டுக் கொண்டனர்.

சிறிலங்கா இராணுவ சுற்றிவளைப்பில் அகப்பட்ட இளைஞர்களின் கைகளைப் பின் புறமாகக் கட்டி வாய்க்குள் பனம் விதையை அடைந்து இரும்புக் கம்பியால் இராணுவத்தினர் நையப் புடைத்ததாக தப்பி வந்த பெண்மணி ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

இதன்போது அகப்பட்ட இளைஞர்களின் கைகள் இரண்டையும் இராணுவத்தினர் பின்புறமாக கட்டித் தம்முடன் இழுத்து வந்ததாகவும் இடையிடையே துப்பாக்கிகளாலும் இரும்புக் கம்பிகளாலும் இவர்களைத் தாக்கியதாகவும்அப்பெண்மணிமேலும் தெரிவித்தார்.

## அராலிப் பகுதி மீது அகோர ஷெல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

அராலி தெற்குப் பகுதிமீது தீவுப்பகுதிகளில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரால் பலத்த எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி தாக்குதல்கள் குடிமக்கள் செறிந்து வாழும் பகுதிகள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தாக்குதலில் சிறுமி ஒருவர் காயமடைந்தார். பலவீடுகள் சேதமடைந்தன. அராலி சரஸ்வதி மகாவித்தியாலய மைதானத்திலும் எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன. மற்றும் கலிபர் தாக்குதலும் சரமாரியாக சுமார் (8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.கரையோரம்நோக்கியும் பலத்த எறிகணை வீச்சு

யாழ். நகரக் கரையோரப் பகுதிகளை நோக்கிச் சிறிலங்கா இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர்.

நேற்று மாலை தீவகத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரால் குருநகர், கொட்டடி ஆகிய கரையோரப்பகுதி (8-ம் பக்கம் பார்க்க)

### இரு படை பலி

வலிவடக்கில் நேற்று இடம் பெற்ற மோதலில் இரண்டு இராணுவத்தினர் பலியாகிய (8ம் பக்கம் பார்க்க)

## மாதகல் கடற்பரப்பில் 6 பீரங்கிப் படகுகள்

மாதகல் கடற்பரப்பில் ஆறு பாரிய பீரங்கிபடகுகள் தரித்து நிற்கின்றன.

நேற்று அதிகாலை முதல் இவை அங்கு தரித்து நின்று மக்கள் குடியிருப்புகள் மீது தாக்குதல்கள் மேற்கொண்டன. இதன்போது ஒருவர் காயமடைந்ததுடன் மூன்று வீடுகளும் சேதமடைந்துள்ளன

இப்பீரங்கிப் படகுகளிலிருந்து மேலும் தாக்குதல்கள் நிகழ்த்தப்படலாம் என அஞ்சி கரையோரப்பகுதிமக்கள்தமது வீடுகளை விட்டு வெளியேறிய வண்ணம் உள்ளனர்.

## அகதிகளை திருப்பி அனுப்புவதற்கு சென்னை நீதி மன்றம் தடை

(சென்னை)

தமிழகத்திலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்குச் சென்னை உயர் நீதிமன்றம் இந்த மாதம் 28 ஆம் திகதி வரை தடை விதித்துள்ளது.

இது சம்பந்தமாகப் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ராமதாஸ், தமிழர் தேசிய இயக்கத் தலைவர் ப நெடுமாறன் தாக்கல்செய்த மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொண்டநீதிபதி எம். சிறிநிவாசன் இந்த இடைக்காலத்தடைஉத்தரவை விதித்தார்.

இலங்கை அகதிகள் கட்டாயப் படுத்தப்பட்டுத் தன்னிச்சையாக இலங்கை திரும்பச் சம்மதிப்பது போல அவர்களிடமிருந்து கையெழுத்து பெறப்படுகிறது என்று தமக்குத் தக (8 ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### வெளிவந்து விட்டது

நொடியும் விடையும் பாகம் IV புதிய புத்தகம் — பரிசுப்போட்டி முடிவுகளுடன் எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ''கோப்பாய் — சிவம்'' வெளியீடுகளை நல்லூர் உற்சவ காலத்தில் நல்லை ஆதீனம் — அஷ்டலக்ஷ்மியிலும், ஸ்ரீகாந் புத்தக சாலையிலும் பெறலாம். பூந்தோட்டம் (சிறுவர் பாடல்கள்), பொறுக்கிய முத்துக்கள் (பொன்மொழித் தொகுப்பு). (3043)

### விண்ணில் அல்ல விடிவெள்ளி

மீரா வெளியீடு ''கிளிநொச்சிப் பிரதேசத்தின் சாதாரண விவசாயக்குடும்பம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை போர்க் காலப் பின்னணியில்'' எழுதியிருக்கிறார் பிரபல எழுத்தாளர் ''தாமரைச் செல்வி'' விற்பனையாகிறது பிக்பென்ஸ் (B) புத்தகசாலை கிளிநொச்சி. (3038)

### புலமைப் பரிசில் பரீட்சை (ஆண்டு 5)

சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் வாரந்தோறும் நடாத்தப்பட்ட மாதிரிப் பரீட்சை வினாத்தாள்களை (Printed) பெற்றுக் கொள்ளலாம். தொகையாகப் பெறுவோருக்கு விசேட கழிவு உண்டு. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3048)

### புத்தகக்கண்காட்சியில்

ஐந்து மீரா பிரசுரங்களை வாங்குபவர்களுக்கு 50 ரூபா பெறுமதியான ''மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்'' என்னும் புதிய நாவல் அன்பளிப்பாக வழங்கப்படுகிறது ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர்கோயில் முன்புறம் நல்லூர். (சி/4908)

### காணவில்லை

ராஜரட்ணம் என்பவரது புத்திரன் உதயன் என்பவரை சென்ற 6ஆம் தேதியிலிருந்து காணவில்லை. இவர் நீலநிறக் காற்சட்டையும் சேட்டும் அணிந்திருந்தார். மூளை சுகமற்றவர். கை வழங்காதவர் வெள்ளை நிறம் உடையவர். கண்டவர்கள் 'அர்ச்சனா ஸ்டோர்ஸ்' கண்டி வீதி, சாவகச்சேரி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும் (3055)

### புலமைப்பரிசில் பரீட்சை

இந்த வருடம் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு முன்னெப்போதையும் விட அதிக பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளார்கள் எனத் தெரியவருகிறது.

3,30,000 பரீட்சார்த்திகள் இந்த வருடம் தோற்றவுள்ள அதேவேளை கடந்த ஆண்டு 2,30,000 பேரே தோற்றினர்.

மேலும் க. பொ. த. உயர்தரப் பரீட்சைகள் ஆகஸ்ட் 25 ஆம் திகதி முடிவடையும் எனவும் பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல தெரிவித்துள்ளார்.

### பண்பாட்டு

...விய முன்னோடிகள் என்கிறார்.

★ கலைக்குரிய பணி சமூகத்துக்கும் பயன்படுவதாகும். தமிழ் சமூகம் இன்று விடுதலையை எதிர்பார்த்திருக்கிறது. இந்நிலையில் சில கலைஞர்களிடம் பண்பாட்டு மௌனம் (Cultural Silence) காணப்படுகிறது. தயங்கித் தயங்கி இராமல் நாடக ஆசிரியர்களும், நெறியாளர்களும் உணர்வால் மாற்றம் கண்டு சாதனை படைக்கும் நாடகங்களை வெளிக்கொணர வேண்டும். பண்பாட்டு மௌனம் கலைந்து நாடகங்கள் உண்மையில் வெளிப்பாட்டை நோக்கிச் செல்ல வேண்டும்.

### விழுதுகள்

நிற்கிறியள்...?'' என்று கோபமாகக் கேட்டேன்- மௌனமாகி நின்ற போராளிகளில் ஒருவன் மெதுவாக முன்னுக்கு வந்து பாண்டியனது துப்பாக்கியை என்னிடம் தந்தான்- முன்னோக்கி திரும்பிப் பார்த்தேன்- மாவீரன் ஒருவனது புகழுடலை தாங்கிய வண்ணம் எமது வீரர்கள் வந்து கொண்டிருந்தார்கள்- எனக்கு விளங்கி விட்டது- ''எதிரிகளின் பாசறையை தேடிப் போகின்றேன்'' என்று மெதுவாக பாடியபடியே பாண்டியனின் தோழன் ஒருவன் என்னைத் தாண்டி சென்றான்-

**வீ. கஸ்ரோ**

## இறால் வளர்ப்பு திட்டத்திற்கு சிலாபப் பிரதேசசபை எதிர்ப்பு

(சிலாபம்)

பல்லின வெளிநாட்டுக் கம்பன்கள் சிலாபத்தில் இறால் வளர்ப்புத் திட்டங்களை ஆரம்பிப்பதற்குச் சிலாபப் பிரதேச சபை அதன் மாதாந்தக் கூட்டத்தில் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

சிலாபம் பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வெளிநாட்டு நிறுவனங்கள் இறால் வளர்ப்புப் பண்ணைகளை ஆரம்பித்தால், அதற்கெதிராகச் சிலாபம் பிரதேச சபை கடுமையான எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## 3 ஆம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



## லெப்டினன்ட் சுதா (யூசி)

(இராசதுரை சுதர்சன்)

| வீரஜனனம் | வீரச்சாவு |
| --- | --- |
| 1968 – 07 – 24 | 1989 - 08 - 21 |

மறப்போர் புரிந்த மாவீரனே சுதா!
மண் மீட்புப் போரிலே இணைந்த நீ!
வரலாறு காவியம் சமைத்தாயே மகனே!

ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்ததையா!
நீ தமிழீழத்தாயின் மடியில் வீழ்ந்தநாளின்றையா!

கண்ணீர் மடை திறந்து வழியுதையா!
மண்ணில் சிங்களம் வீழ்வது திண்ணமையா!
விண்ணில் நின்று நீ சிரிப்பது தெரியுதையா!

''சுந்தர நிவாஸ்''
வி. எம். றோட்,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

(சி- 4917)

# ஓராண்டு நிறைவு!!

யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கத்தின்

# யாழமுதம்

## "உழைப்போர் உணவகம்"

**நாளை 22 - 08 - 92 சனிக்கிழமை**
**தனது ஓராண்டு**
**தன்னிகரற்றசேவையைப்பூர்த்திசெய்கிறது**
**எமது புதிய முயற்சிக்கு**
**ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி.**
**தொடர்ந்தும்**
**தரமான உணவு வகைகளை**
**நியாய விலையில் வழங்க**

# யாழமுதம்

**தயாராகவுள்ளது.**

22 – 08 – 92 சனிக்கிழமை அன்று
தேநீர், கோப்பி, சிற்றுண்டி வகைகள் அனைத்தும்
மலிவு விலையில் வழங்கப்படும் என்பதை
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொளகின்றோம்.

**அனைவரும் வருக!!!**

யாழமுதம்,
யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம்
[வரைவுள்ளது]

(சி/4921)

தலைவர்,
பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.

## நினைவு கூருகின்றோம்...
## 1992 - 08 - 21

1988 ஆம் ஆண்டு இதேதினத்தில் அம்பாறை-அக்கரைப்பற்றுப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.

1989 ஆம் ஆண்டு அம்பாறை-அக்கரைப்பற்றுப் பகுதியில் இந்தியப் படையினர் மற்றும், தேசவிரோத சக்திகளுடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**நளின்** (பிரதாப்குமார் அஜித்குமார் - தாமரைக்குளம், பொத்துவில், அம்பாறை)

**அலன்** (சின்னத்தம்பி செல்லத்துரை-நற்பிட்டிமுனை 07, கல்முனை, அம்பாறை)

பருத்தித்துறை / தம்பசிட்டி, நாவலடிப் பகுதியில், இந்தியப்படையினருடனான மோதலில்வீரச்சாவெய்திய-

யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர்:-

**மேஜர் டயஸ் / கந்தசாமி** (மயில்வாகனம் தவராசா - 66, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்)

**லெப். யூசி / சுதா** (இராசதுரை, சுதர்சன்- 'சுந்தர நிவாஸ்' வி. எம். வீதி, பருத்தித்துறை)

வடமராட்சி / திக்கம், அல்வாய் மேற்கு, பூமாஞ்சோலை, வியாபாரி மூலை, நாவலடிச் சந்தி ஆகிய பகுதிகளில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இருதயக் கல்லூரி உயர் வகுப்பு மாணவன் உட்பட 11 தமிழர்கள்.

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட செங்கலடி, தளவாய், கொம்மாந்துறை, ஆறுமுகத்தான் குடியிருப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 5 தமிழர்கள்.

யாழ்ப்பாணம் - பாஷையூர், வட்டுக்கோட்டை, அச்சுவேலி புற்றளை ஆகிய பகுதிகளில் சிறிலங்காப் படையினர்மேற்கொண்டவிமானத்தாக்குதல்களில்கொல்லப்பட்ட சிறுவர்கள், பெண்கள் உட்பட 13 தமிழர்கள்

1991ஆம் ஆண்டு மட்டக்களப்பு, கொக்குவில் பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினர், மற்றும் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**சுகந்தன்** (நாகராசா யோகநாதன்-கருவேப்பங்கேணி, மட்டக்களப்பு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி/4919]




அந்தச் சிறுவன் தானும் ஓட வேண்டுமென்று அடம் பிடித்தான். அது நீண்டதூரம் ஓடும் மரதன் ஓட்டப்போட்டி. பிரபல ஓட்ட வீரர்கள் பலர் கலந்துகொள்ளும் அந்நிகழ்ச்சியில் எப்படி இந்த எட்டு வயது சிறுவனை ஓட விடுவது...? என்று அந்தப் போட்டியினை ஒழுங்கு செய்த சனசமூக நிலைய நிர்வாகிகள் தயங்கி நின்றார்கள். ஆனால் சிறுவனோ ஓட வேண்டுமென்று பிடிவாதமாக நின்றான். இறுதியில் ''உனது அப்பா, அல்லது அம்மாவை அழைத்துவா, அவர்கள் சம்மதித்தால் உன்னை ஓடவிடலாம்'' என்று சொல்லி சிறுவனை அனுப்பினார்கள். அவனோ தனதுதாயை அழைத்து வந்துஅனுமதிபெற்று மரதன் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்டான். மரதன் ஓட்டம் என்றால் நீண்ட தூர ஓட்டம். சாதாரணமாக நிறையப்பேர் ஓட ஆரம்பிப்பார்கள் களைத்து இடையில் நிற்பவர் தான் அதிகம். முழுத்தூரத்தையும் ஓடி முடிப்பது என்பதே பெரிய விடயம். பிரபல ஓட்ட வீரர்கள் பலருக்கு முன்பாக ஊரே வியக்கும் வண்ணம் அந்தச்சிறுவன் நான்காவதாகஓடி முடித்தான். ஊரிலுள்ளகடைக்காரர்கள்எல்லோரும் சேர்ந்து அந்தச் சிறுவனுக்கு சிறப்புப் பரிசு வழங்கி கௌரவித்தார்கள். இந்தச் சிறுவன் பின்னாளில் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்த மாவீரனாக வருவான் என்பதைஎவரும் சிந்திக்கவில்லை. அவன் வேறு யாருமல்ல... அவன்தான் மாவீரன் கப்டன் பாண்டியன்.

பண்டத்தரிப்பு பெற்றெடுத்தஅருந்தவப்புதல்வன் பாண்டியன். இவன் துரைசிங்கம் தம்பதிகளிற்கு மகனாகப் பிறந்தான். சிறுவயதிலேயேதன்னை இயக்கத்தோடு இணைத்துக் கொண்டவன். இயல்பாகவே விளையாட்டுத்துறையில் சிறந்து விளங்கினான். குறிப்பாக ஓட்டப்போட்டிகளில் இவன் பெற்ற பரிசுகள் ஏராளம் ஏராளம். இயக்க பயிற்சிகளில் கூட நீண்ட தூரம் ஓட்டத்தில் இவன்தான் முதலாவதாகவருவான். இயக்கத்திற்கு போவதற்காக கராட்டி கற்றுக் கொண்டான். இதனால் தலைமயிரை கட்டையாக வெட்டி, புரூஸ்லி மாதிரியான அசைவுகளை பாவனைகளை செய்து காட்டுவான். இதனால் இப்பகுதி மக்கள், இவனது நண்பர்கள் எல்லோரும் ''புரூஸ்லீ'' என்றே அழைத்தார்கள்.

சாவகச்சேரியில்தனது பயிற்சியைமுடித்த பாண்டியன், அந்தக் காலகட்டத்தில் பண்டத்தரிப்பு, சித்தங்கேணி, சுழிபுரம் பகுதிபொறுப்பாளராக விளங்கிய மேஜர் பிரசாத்தின் கீழ் அரசியல் வேலைகளை செய்து வரலானான். எந்த நேரமும் கலகலப்பாக சிரித்தபடியே வேலைகளை செய்வது இவனது பழக்கம். எந்தஒரு சூழ்நிலையிலும் தனது பகிடிக்கதைகளால் கலகலப்பை ஏற்படுத்தக் கூடியவன். இதனால் அப்பகுதி மக்கள்இவனில் அன்பைப் பொழிந்ததில் ஆச்சரியமேதுமில்லை.


இந்திய இராணுவ கால கட்டத்தின்போது இவன் பண்டத்தரிப்பு, சித்தங்கேணி பகுதிகளில் அரசியல் வேலைகளில் ஈடுபட்டான். இவனைப் பிடிப்பதற்கு இந்திய இராணுவம் நாயாய் அலைந்தது. வாகனங்கள் சகிதம் தேடித்திரிந்தனர். பொதுமக்களிடத்திலெல்லாம் 'பாண்டியன்எங்குநிற்கிறான்' என்றெல்லாம் விசாரித்தார்கள். இவர்கள் ஏன் இப்படி அலைந்தார்கள்...? எல்லாம் தங்களது பதவிகளையும், ஊதியங்களையும், உயர்த்துவதற்காகவே. ஒருமுறை பாண்டியனுக்கு நல்லபசி. தனது வீட்டிற்குச்சென்று சாப்பிட அமர்கிறான். களைத்து விழுந்து வந்தமகனுக்கு உணவுபரிமாற என தாயார்ஆவலுடனும், பரிவுடனும் வந்த போது ஏதோவொரு இரைச்சல்சத்தம்கேட்டது. பாண்டியன் உணர்ந்து கொண்டான். கூர்மையாக என்ன சத்தம் என்றுஅவதானிக்கலானான். வீட்டில் வானொலிப்பெட்டி பாடிக்கொண்டிருந்ததால் மற்றவர்களுக்குச்சத்தம் கேட்கவில்லை. பாண்டியன் மெதுவாக எழுந்து பின் பக்கவாசல் கதவை அணுகினான். எட்டிப்பார்த்தான். காக்கியுடுப்பில் பல பேய்கள் வாகனத்தில் வந்து குதித்தன. அந்த நேரத்தில் இவன் ஏதாவது செய்திருந்தால் அந்தப் பேய்கள் நிறையபொது மக்களைக் கொன்றிருப்பார்கள். எனவே மரதன்அனுபவம் இவனுக்கு கைகொடுத்தது- இராணுவம் இவனது வீட்டைச்சுற்றி வளைக்கும் முன்பு இவன்பாதுகாப்பான இடத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

இதற்குப்பின்னர் ஒருமுறை இயக்க சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டுவந்து கொண்டிருந்தான்- இன்னும் சில இடங்களில் ஒட்டுவதற்கு என சில சுவரொட்டிகள் சைக்கிளின் பின்பக்க கரியலில் கிடந்தது- பசைவாளி முன் காண்டிலில் தொங்கியது- பண்டத்தரிப்பிலுள்ள திருப்பம் ஒன்றால்திரும்பினான்- எதிரில் இந்திய இராணுவம் துப்பாக்கி சகிதம் நின்றிருந்தது. சைக்கிளை வளைத்துக் கொண்டு வந்த வழியே திரும்பி விரையலானான். இந்திய இராணுவம் கலைத்துக் கலைத்துச் சுட்டது- இவனது எல்லாப்பக்கத்தாலும் ரவுண்ஸ் உரசிக் கொண்டு போனது- ஆனால் எதுவும் இவனுக்குப்படவில்லை- பத்திரமான இடத்திற்குப்போய் நின்று தனதுசைக்கிளைப்பார்த்தான்-சுவரொட்டிகள் ரவைகள் பட்டு பிய்ந்து போய்க்கிடந்தன- சைக்கிள் பாரிலும், பின்பக்க கரியலிலும் ரவைகள் கோலம் போட்டிருந்ததை அவதானித்தான்- இந்த முறை மயிரிழையில் உயிர் தப்பியதை உணர்ந்தான்.

இதற்கு ஒரு வாரத்திற்கு பின்பு மீண்டும் வடலியடைப்பு பகுதியில் பாண்டியன் சுவரொட்டி ஒட்டிக்கொண்டிந்த போது எதிரும் புதிருமாக இந்தியஇராணுவம்வந்துவிட்டது. இந்த முறை அவனால் தப்ப முடியவில்லை- வயிற்றில் சில வெடிகளுடன் கீழேசரிந்தான்- மயக்கமானான்- இவனை பிடிப்பதற்கு இந்திய இராணுவம் எவ்வளவோ முயற்சி செய்தும் முடியாமல் கடைசியில் சுட்டு கைது செய்தது- கண் திறந்து பார்த்தால் இந்திய இராணுவ முகாம்அதன்பின்புகாங்கேசன் துறைதடுப்புமுகாம் எனஇவன் சிறையில் வாடினான். சுதந்திரத்தை நாடி நின்றவனை சிறைச்சாலை என்ன செய்யும்? இங்கு கைது செய்த எல்லோரையுமே இந்திய இராணுவம் மனிதர்களைப் போல் நடத்தவில்லை. விலங்குகளைப் போலவே நடாத்தினார்கள் துன்புறுத்தினார்கள், சித்திரவதை செய்தார்கள், எவ்வாறெல்லாமோ செய்து இந்திய இராணுவம் தமது மனவக்கிரகங்களை தீர்த்துக் கொண்டனர். உளவியல் ரீதியாக கைதிகளை பாதிப்படையச் செய்தார்கள். இதனால் தமது விடுதலை உணர்வை இவர்கள் இழப்பார்கள் என நம்பினார்கள்: ஆனால் இந்திய இராணுவம் எதிர்பார்த்ததிற்கு மாறாக உருக்கு போன்ற உறுதியும், போராட வேண்டுமென்ற ஆவேசம் அங்கு வளர்ந்தது. இப்படித்தான் பாண்டியனையும் சிறைச்சாலை ஒரு முழுமையான போராளியாக்கியது. அவனது உறுதியும், ஆவேசமும், தாய் நாட்டின் மீதான பற்றும் அவனுக்கு மேலும் மேலும் வளர்ந்தது.

மண்டைதீவு சண்டையில் இவன் தம்பி வந்ததே பெரிய பாடாக இருந்தது. மண்டைதீவினை எல்லாப் பக்கமும் இராணுவம் சுற்றி வளைத்து விட்டார்கள். கடற்கரைப் பக்கத்தால் பீரங்கிப் படகுகள் சரமாரியாக வேட்டுக்களை தீர்த்துக் கொண்டிருந்தது. இரண்டு கெலிகளும், பொம்மர்களும் தமது இரையைத் தேடும் பருந்துகள் போல வானிலே வட்டமிட்டு தேடின பின்னுதைப்பற்ற பீரங்கியின் மூலம் செல்களை கண்மூடித்தனமாக அடித்தவண்ணம் இராணுவம் நெருங்கியது. இவனுக்கு காலில் காயம் தனது தோழர்களுடன் மண்டைதீவு புறக்கடலுக்கு போய் அங்கிருந்து சிறுத்தீவிற்கு வந்து அங்கிருந்து ஒருவாறு குருநகரையடைந்தான்.

வெற்றிலைக்கேணியில் தரையிறங்கிய இராணுவத்தினர், ஆனையிறவினை நோக்கி முன்னேறலாயினர். இவர்களை இடை மறிப்பதற்காக மேஜர் பவா தலைமையில் படைப்பிரிவொன்று பலாலியிலிருந்து புறப்பட்டது. இப்படைப் பிரிவை அனுப்பும் ஒழுங்கை தான் நின்று செய்து கொண்டிருக்கும் பொழுது என்னிடம் பாண்டியன் வந்தான். ''எல்லாரும் ஆனையிறவுக்கு போகினம் நாங்கள் போறதில்லையோ'' என்று கேட்டான் ''யாழ்ப்பாணத்திற்குள் இறங்கினால் யார் பார்க்கிறது?. நாங்கள் தானே. அதனால் கொஞ்சம் பொறு'' என்று அவனை சமாதானப்படுத்தினேன் ''எப்படியும் நாங்கள் ஆனையிறவுக்குப் போகவேணும்'' என்று அடம்பிடித்தான். ''கோட்டை, மாங்குளம், பாலாலி, தச்சன்காடு, தீவு என்று எல்லாச் சண்டைக்கும் போனனான் இதுக்கும் கட்டாயம் போகவேண்டும்'' என்றான். ''எங்களுக்கு அறிவித்தல் வரும்போது வெளிக்கிடுவம்'' என்று கூறி ஒரு மாதிரி அவனை சமாளித்தேன் ஏற்கனவே கோட்டை, மாங்குளம், தச்சன்காடு, மண்டைதீவு ஆகிய இடங்களில் சண்டையிட்டு வீர வடுக்களை பாண்டியன் பெற்றிருந்தான்.


கப்டன் பாண்டியன்

அதன் பின் யுத்தத்திற்கு எல்லோரும் ஆயத்தமாகிக் கொண்டிருந்தோம். பாண்டியனும் தனது படைப்பிரிவை சரிபார்த்துக் கொண்டான். ஒவ்வொருவராக ஒவ்வொரு குழுவாக எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்திவிட்டு என்னிடம் வந்தான். ''எல்லாம் சரியண்ணை இனி வெளிக்கிடுகிறது தான் பாக்கி'' என்றான் ''சரி எல்லோரும் வெளிக்கிடுங்கோ'' என்று கூறிவிட்டு புறப்பட்டேன். பாண்டியன் கையில்ஒருவோக்மனை எடுத்துக் கொண்டு புறப்பட்டான் சில நாட்களாகவே வோக்மன் ஒன்றை வைத்து இயக்கப் பாடல்களை பாண்டியன் கேட்டுக் கொண்டிருந்ததை அவதானித்திருந்தோம். ஆனால் சண்டைக்குப் போகும் பொழுது ஏன் வோக்மன்? என் மனதில் வினா எழுந்தது ''நாங்கள் என்ன அடிபட போறமோ அல்லது பாட்டுக் கேட்கப்போறமோ'' என்றொரு போராளி பாண்டியனை மறித்து கேட்டான். இவன் என்ன பதில் சொல்லப் போறான் என்று நான் ஆவலுடன் காத்திருந்தேன். ''மச்சான்... அடிபடக்கே சந்தோசமாக அடிபடவேணும்... சும்மா டென்சனாக இருக்கக்கூடாது அப்பத்தான்ஆமி ஓடுவான்...'' என்றான். பாண்டியன் ''இங்கே கொண்டு வா அதைப் பார்ப்பம்'' என்று கேட்டு அந்த வோக்மனை வாங்கினேன். அதன் பாடும் (Play) பட்டினை அழுத்திய போது ''எதிரிகளின் பாசறையைத் தேடிப் போகின்றோம்'' என்று அது பாடத்தொடங்கியது. சிலாபத்துறை சண்டையின் போது இதே பாடலை பாடிய படியே மேஜர் ரஞ்சன் இராணுவ முகாமிற்குள் புகுந்தது எனக்கு நினைவுக்கு வந்தது.

எங்கும் ஒரே நிசப்தம். அங்கு இருந்த பற்றைகளோ மிகக் குறைவு இருந்தவைகளும் செல்லுகளாலும், பீப்பா குண்டுகளாலும் அரைவாசி கருகியும் சில அரை குறைப் பச்சையாகவும் காட்சியளித்தன. அப்பிரதேசத்தில் இருந்தவையோ சில பனை மரங்கள் அவற்றிலும் 50 கலிபர் தொடக்கம் எல்லா வகையான ரவைகளினாலும் கோலம் போடப்பட்டிருந்தன. நாங்கள் வந்த பாதை நெடுகவும் செல்களால் விதைக்கப்பட்டு அதன் எஞ்சிய புறப் பலர்கள் மட்டும் ஏராளமாகக் கிடந்தன. அங்கு பறவைகளோ, விலங்குகளோ எதுவுமே இருக்கவில்லை. எப்படி அவை இருக்கும்...? இராணுவப் பேய்களும் நாங்களும் மட்டுமே நின்றோம். எமது காவலரண்களிற்கு போகும் பாதையினைப் பார்த்தேன். கானல் நீர் தெரிந்தது... அனல் பறக்கும் வெய்யில்: வியர்வை வெள்ளமாக வடிய, தாகம் தொண்டையினை வறட்டியது. ஆம்! நாம் பாலைவனச் சண்டையொன்றில் நிற்கின்றோம்.

சற்று முன்னர் தான் இரண்டு பொம்பர்கள் குண்டுகளை வீசி களைத்துப்போய் சென்றிருந்தன. மேலே மீண்டும் இரைச்சல்! நிமிர்ந்து பார்த்தால் 'சீ பிளேன்' டேய் எல்லாரும் மறைவாக நில்லுங்கோ இடத்தை காட்டி கொடுக்காதேங்கடா'' என்று யாரோ ஒருவன் கத்தினான். வேவு பார்ப்பதற்காக மிகமிக உயரத்தால் பறந்து எமது இடத்தை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தது. இதனைத் தொடர்ந்து இரண்டு கெலிகள் விரைந்து வந்து கொண்டிருந்தன. எமது விமான எதிர்ப்பு துப்பாக்கிகளுக்கு பயந்து மிக உயரத்திலேயே பறந்து தாக்குதலை நடாத்தின. இவற்றுக்கு மத்தியில் பால்ராஜ் அண்ணை அன்று பின்னேரம் நடத்த வேண்டிய தாக்குதலைப் பற்றி எல்லோருக்கும் விபரிக்கிறார். புல்லாவெளி காவலரண்களின் முன்புறமாகவும் இரண்டு பக்கவாட்டு பக்கமாகவும் புகுந்து அடிப்பதற்கு திட்டமிடப்பட்டது. பாண்டியன் தலைமையிலான குழுவே புல்லாவெளி காவலரண்களின் முன்பக்கமாக புகுந்தடிப்பது எனத் திட்டமிடப்பட்டது. தாக்குதலிற்கான ஏற்பாடுகளை முன்னின்ற சில தளபதிகள் ஏற்பாடு செய்கின்றனர்.

மாலைக் கதிரவன் மெல்ல படுக்கைக்கு போனான். ஆனால் கொதிமணல் இன்னும் தனது சூட்டை குறைக்கவில்லை. மாலை நேரங்களில் கேட்கும் பறவைகளின் சப்தம் எதுவுமே அங்கு இல்லை. வானம் இரத்த மயமாக சிவந்திருந்தது. வரவிருக்கும் சண்டைக்கு அறிகுறியோ? தாக்குதல் நடாத்தும் இடத்தில் எமது போராளிகள் உத்தரவை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்தார்கள். இறுக்கமான மௌனம் ஒன்று அங்கு நிலவியது. உத்தரவு கிடைத்தது. தாக்குதல் ஆரம்பமானது. எதிரியின் காவலரண்களை நோக்கி எமது வீரர்கள் பாய்ந்தார்கள். சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்கள்இலக்குகளை நோக்கி சீறிப்பாய்ந்தன. கைக்குண்டுகள் இருதரப்பினராலும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. டொங்கான் செல்லுகளும், இருதரப்பு மோட்டார் செல்லுகளும் முழங்கத் தொடங்கின- சண்டை உக்கிரமடைய புல்லாவெளிப் பிராந்தியமே கிடுகிடுவென அதிர்ந்து கொண்டிருந்தது.

பாண்டியன் தனது இலக்கினை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தான்- தனது குழுவினர்களையும் உற்சாகப் படுத்தி அவர்களையும் தத்தமது இலக்குகளை நோக்கி முன்னேறச் செய்தான்- அவனுக்கு முன்பாக இருந்த எதிரியின் ஜீ- பி- எம்- ஜீ ஒன்று இடைவிடாது சடசடத்து எமது போராளிகளின் முன்னேற்றத்தை தடுத்துக்கொண்டிருந்தது- இதனை அவதானித்த பாண்டியன் தனது துப்பாக்கியை அருகிலிருந்த தோழனிடம் கொடுத்து பக்கத்தே வரும்படி பணித்தான்- அந்த ஜீ- பி- எம்- ஜீயினை மடக்குவதற்காக அதன் பக்கவாட்டால் முன்னேறினான்- எதிரியின் துப்பாக்கி சற்று ஓய்ந்த்து-அவ்விடைவெளியை பயன்படுத்தி பாண்டியன் பாய்ந்தான்- ஆனால் அந்தோ... எதிரியின் துப்பாக்கி இவனை நோக்கி மீண்டும் சடசடத்தது- வயிற்றிலும் மார்பிலும் சில ரவைகள் இவனைத் துளைத்தன-இவன் செங்குருதி தாய் மண்ணினை நனைத்தது- மனந்தளராது மீண்டும் முன்னேற முனைய மேலும் சில வெடிகள்... தாக்குதல் முடிவடைந்து எமது தோழர்கள் திரும்பிக்கொண்டிருந்தார்கள்- ''நல்ல அடி: இராணுவத்தில் 22 பேருக்கு மேல்கொல்லப்பட்டிருக்கிறார்கள்'' என்றார் பால்ராஜ் அண்ணை-காயமடைந்த வீரர்களை மருந்துவசிகிச்சைக்காக பின் தளத்தற்கு அனுப்பிக் கொண்டிருந்தேன்- களைத்துப்போய் எமது குழுவினர் என்னை நோக்கி வந்தனர்- நான் அவர்களை ஒழுங்குபடுத்திக்கொண்டிருக்கும் போதே பாண்டியனைக்காணாததை அவதானித்தேன்- ''பாண்டியன் எங்கே?'' என்று கேட்டேன்- அது வரைக்கும் சளசளவென கதைத்த அனைவரும் மௌனமாகிப்போனார்கள்- அவர்கள் முகத்தில் சோகம் அப்பியிருந்தது- எல்லோரும் தலையைக் குனிந்து கொண்டார்கள்- பாண்டியன் காயமடைந்த செய்தி எனக்கு முதலே வந்திருந்தது. ''பாண்டியனுக்கு என்ன சீரியசோ? காயப்பட்டவர்களில் நான் அவனைக் காணவில்லை... என்ன எல்லாரும் பேசாமல்

(2ஆம் பக்கம் பார்க்க)

சிறுகதை

# என்னைக் காணவில்லை

மன்னிப்புக் கேக்கணுமாம் மன்னிப்பு .....

எதுக்காம்? நான் என்ன தப்பு செஞ்சேன்? அவங்க எல்லாம் அப்படித்தான் இருப்பாங்களாம் ஆனாக்க நான் தான் அனுசரிச்சுப் போகணுமாம்!

எனக்கு ஒவ்வொருத்தர் மென்னியையும் திருகிப் போடணும் போல இருந்தது.

தனிக்குடித்தனம் போன துக்கப் புறம் கட்டில் வாங்கித் தரேன்னு எங்கப்பா சொன்னது தப்பாம்.

இந்த ராத்திரியிலே புதுக் சட்டில் வாங்கிக் கொண்டு வந்தாதான் சாந்தி மூகூர்த்தம்னு மாப்பிள்ளை சொன்னதுக்கு அதுக்கு அவங்க வீட்டுக் காரங்க ஒத்து ஊதினதுக்கு,

''ஆமா, இப்ப சாந்தியும் வேண்டாம்'' ஒண்ணும்வேண்டாம் னு நான் சொன்னது தப்பாம்!

''சே..... சே நீங்க எல்லாம் ஆம்பிளைங்கன்னு சொல்லிக்கிறீங்களே வெக்கமாயில்லே'' ன்னு நான் கேட்டது தப்பாம்.....

''எங்கப்பா முப்பது வருஷமா உழைச்சு சம்பாதிச்சதை ஒரு நாளிலே தீபாவளியாக் கிட்டீங்களே'' ன்னு நான் சொன்னதும் தப்பாம்.

புதுக்கட்டிலிலே தான் படுத்துப் பேன்னு அடம் பிடிப்பவரிடம், நீங்ககீழே படுத்துக்குங்க, நானும் கூடப் படுத்துக்கிறேன். படுத்துக்கிறதுக்குத்தானே இவ்வளவு ஆர்ப்பாட்டமும், செலவும்' னு நான் சொல்லவா முடியும்? வெக்கம் கெட்டவங்க ..... சே...

நான் கூனிக் குறுகிப் போய் மாடியிலேயிருந்து இறங்கிவந்தது தப்பாம் அடிச்சாலும் பிடிச்சாலும் அங்கேயேஇருந்து அவர் மனசை மாற்றியிருக்கணுமாம்.....

''பொண்ணுங்களை வளக்க வேண்டிய விதத்தில வளக்கணும் படிச்சு வேலைக்குப் போறாங்கிற திமிரு!''

''தாலி கட்டி முழுசா ஒரு நாள் கூட ஆகலே அதுக்குள்ளே மாப்பிள்ளையை இப்படியா எதிர்த்துப் பேசுவா ஒருத்தி?''

''இப்பவெல்லாம் பொண்ணுங்களுக்கு எல்லாத்திலேயும் ஆத்திரம், அவசரம் ஆம்பிளைங்களுக்கு கொஞ்சம் கோபம் இருக்கத்தான் செய்யும் அதுக்காக முதல் நாள் இராத்திரியே சண்டை போட்டுக்கிட்டு வரணுமாக்கும்?''

வயதுகள் படித்த வேகத்தில் நான் அழ என்னைப்பார்த்து எங்கம்மா அழ; அம்மாவைப் பார்த்து இதுவரை எதற்குமே அழாத அப்பா அழ என் தங்கைகள் மூவரும் மௌனமாய் கலங்கிய கண்களுடன் நிற்க மாப்பிள்ளையின் அக்கா வந்தாள்.

''ஏதோ நடந்தது நடந்து போச்சு பொண்ணுக்கு நல்ல புத்திசொல்லி அனுப்பி வையுங்கோ. கொஞ்சம் அப்படி, இப்படி அனுசரிச்சுப் போனாத்தான் குடும்பம் நடாத்த முடியும். பி.ஏ, எம்.ஏ,ன்னுபடிச்சா மட்டும் போதுமா? ஆம்பளையை எப்படி அனுசரிச்சுப் போறதுன்னு தெரிய வேண்டாமாக்கும் இப்படியா விருட்டுன்னு கோவிச்சுட்டு வரது? கொஞ்சம் பொண்ணை அலங்காரம் செய்துகொண்டு விடுங்க, எதுக்கும் கட்டிலுக்குமூவாயிரம் கொடுத்துடுங்க.

அப்போதுதான் என் அம்மா சொன்னாள்.

''மாப்பிள்ளைகிட்டே மன்னிப்புக்கேட்டுட்டு, போய் அவரோட இரு, நாளைக்கு அப்பா புதுக்கட்டில் வாங்கிக்கொடுத்திடுவார்.''

அந்த வார்த்தைகளில் என் அம்மா எனக்குஅன்னியமாகிப் போனாள்!

இன்னமும் கலியாணத்துக்கு மூணு தங்கைகள்.

என் அப்பா இப்போதே சோர்ந்து விட்டார்.

நான் போனேன் மாப்பிள்ளையின் காலில் விழுந்து எதற்கென்று தெரியாமலேயே மன்னிப்புக் கேட்டேன். அவர் என்னைத்தொட்டார், அணைத்தார் எனக்கு அவமானம் பிடுங்கித் தின்றது அந்த ஆணின் அவஸ்தையைத் தீர்த்து வைத்தேன் எனக்குள் இனி விலக முடியாத அவஸ்தைகள் முத்தங்களில் எனது மூச்சுக்காற்று சிறைப்பட்டது! அப்போதும் கட்டிலுக்கு மூவாயிரம் என்பது ஞாபகத்துக்கு வந்தது.

அவர் என் உடலைத் தேடினார் நான் எனக்குள் என்னையே தேடினேன்.

அவர்தேடியது கிடைத்தது- நான் தேடியது கிடைக்கவேயில்லை-

அடுத்த நாள் காலை அம்மா கேட்டாள்.

''மாப்பிள்ளை மன்னிச்சுட்டாரா?''

நான் ஒரு புள்ளியாகி இந்தியப் பிரபஞ்சத்தில் கலந்து காணாமல் போயே விட்டேன்!

நன்றி- கல்கி

# நெருப்பைத் தின்னும் நிலத்தின் மைந்தர்கள்

நாங்கள் .....
நெருப்பைத் தின்னும்
நிலத்தின் மைந்தர்கள்......
வெப்பம் எம்மை
விழுங்கி விடாது
சூரியன் எம்மை
சுட்டெரிக்காது .....
காற்று எம்மை
காதலிக்கும்!
நிலவு எம்மோடு
நேரிலே பேசும்......!

பற்றைக்குள் இருக்கும்
பாம்புகள் கூட
பாசத்துடன் எம்மைப்
பார்க்கும்!

காவலரணில் கண்ணுறங்கும்
பூரானும் தேளும்
தீராத ஆசையினால் - எம்மை
தீண்டாது!

ஓயாக் கடல்
உறுமலுடன் வந்து
காலடியில் விழும்!
எமது.....
இரும்புக் ( எலும்புக் ) கூட்டுக்குள்
இருப்பது இமயமலை!
அதனால் தான்.....
பெரும் புயல் கூட - எம்மை
பெயர்க்க முடியாமல்
பணிந்து போகிறது!

எமது விழிகள்......
சோகமுடன் செல்லும்......
மேகங்களையும் கடந்து
வேகமுடன் விண்ணோக்கி ...
தாகமுடன் பாயும் ...
தகுதி பெற்றவை!

எம்மைத் தொட்டால்
இதமாக இருப்போம்.....
எம்மையே அழிக்க வந்தால்......
எமக்குள்ளிருந்து வெடிக்கும்......
எரிமலைப் பிளம்பு!

துட்டகைமுனுக்கள் - எம்மை
தூர இருந்து பார்க்கட்டும்;
கிட்டே வந்தால்
கிளர்ந்தெழும்......நெருப்பு!

ஏனெனில்......
நாங்கள்......
நெருப்பைத் தின்னும்......
நில மகளின் மைந்தர்கள்!

★ ★

-கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன்

# இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு

''நான் யாழ்ப்பாண விஷேச நிருபர். முன்னாள் ஜனாதிபதி, இன்னாள் ஜனாதிபதி, எதிர்க் கட்சித் தலைவி மற்றும் லலித் அத்துலத்முதலி காமினி திஸநாயக்க ஆகிய உங்கள் அனைவரையும் ஒன்றாகச் சந்திப்பதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி. நீங்கள் அனைவரும் ஒன்றாக இருந்து எனக்குப் பேட்டி அளிக்கவும் உரையாடவும் சம்மதித்ததற்காக முதலில் உங்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்''

நிருபர் அனைவரையும் பார்த்துப் புன்முறுவல் செய்துவிட்டு லலித்தை நோக்கி;

''ஒன்பது இராணுவ உயர் அதிகாரிகளும் தீவுப் பகுதியில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து பிரேமதாஸா இனப்பிரச்சினையைத் தீர்க்கத் தவறிவிட்டார் என்று நீங்கள் கூறினீர்கள். நீங்கள் தீர்வை விரும்புவதை எண்ணி நான் மகிழ்ச்சி அடைந்தேன்.''

லலித் வாயைச் சரித்து ஒரு விதமாகச் சிரித்தார்.

''நீங்கள் கூறும் தீர்வென்பது குறைந்த பட்சம் வடக்கு கிழக்கு மாகாணங்களை ஓர் அலகாகக் கொண்ட அதிகாரங்களுடன் கூடிய ஒரு மாநில அமைப்பைத்தானே!''

லலித் தனது சொண்டுகளைக் குவித்துப் பிடித்தவாறு தலையை மேலே உயர்த்திய வண்ணம் கூறத் தொடங்கினார்.

''இல்லை. நான் அப்படிக் கூறவில்லை. பிரேமதாஸா அரசாங்கம் பிரச்சினையைத் தீர்க்கத் தவறிவிட்டது என்று நான் கூறியதன் அர்த்தம் அவர் தமிழ் மக்களை அழித்தொழிக்கத் தவறிவிட்டார் என்பதே.''

ஓ! !!...!!! அப்படியென்றால் மெயின் காம் என்ற நூலில் யூதப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு என்று கிற்லர் எழுதியதைப் போன்றதா?''

''ஆம் அப்படியேதான்''

சிறிமா பண்டாரநாயக்காவின் முகத்தில் ஒரு சந்தேகக் குறி தெரிந்தது.

''கிற்லர் எழுதியுள்ள இறுதித்தீர்வு என்ன?'' என லலித்தை நோக்கிச் சிறிமா கேட்டார்.

''யூத இனத்தை பூண்டோடு முற்றும் முழுவதுமாக பூமியின் எந்தோர் இடத்திலும் சாலடையாளம் இல்லாதவாறு அழித்துவிடுவது''

''அதனை நீங்கள் கிற்லர் எழுதிய ஜேர்மன் மொழியிலேயே வாசித்தீர்களா?''

''இல்லை நான் ஒக்ஸ்பேட் பல்கலைக்கழகத்தில் படித்த காலத்தில் ஆங்கிலத்தில்தான் வாசித்தேன்''

''ஜேர்மன் மொழியில் வாசித்திருந்தால்தான் அதன் திட்பநுட்பம் நன்றாக விளங்கியிருக்கும். பறவாயில்லை; அது ஒரு நல்ல தீர்வுதான். ஆனால் தமிழரை அப்படிப் பூண்டோடு அழித்தொழிப்பது சாத்தியப்படாதே''

வெள்ளை வெளீரென ஆடையணிந்துள்ள ஜே.ஆர். நிமிர்ந்து தனது கும்பத்தைச் சரித்தபடி ஒற்றை. ஒற்றைச் சொற்களாகப்பேசத்தொடங்கினார்.

''சிறிமா கூறுவது போல எங்களால் அழித்தொழிப்பது சாத்தியமில்லை என்பதால் தான் இராஜந்திர உள்நோக்கத்தோடு இந்திய இராணுவத்தின் உதவியை நாடினேன்''

''இல்லைப்பாருங்கோ. அது எங்களுக்குள்ள பல பிரச்சினைகளையும் முரண்பாடுகளையும் கொண்டுவந்துவிட்டது'' எனக் கூறியவாறு சிறிமா தனது கொண்டையை சரி செய்து கொண்டார்.

''அதுதான் எனக்கு நல்ல வாய்ப்பைத் தந்தது'' என பிரேமா சிரிக்காமலே சொல்லிவிட்டார்.

''நீர் அந்தச் சந்தர்ப்பத்தைச் சரிவரப் பயன்படுத்திப் பதவிக்கு வந்திட்டீர். ஆனபடியாற்தான் இந்த ஒன்பது உயர் அதிகாரிகளும் கொல்லப்பட்ட சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திநாங்கள் உங்கடை அமைச்சர்களுக்குக் கல்லெறிஞ்சநாங்கள்'' என்று சிறிமா சற்றுக் கடுகடுப்பாகவே கூறியிருந்தார்.

''கல்லாலைஎறிந்துஎன்னை வீழ்த்த முடியாது'' எனப் பிரேமாசற்று தடித்த தொனியிற் கூறினார். நிருபருக்கு சற்று அச்சம் தோன்றத் தொடங்கியது. இவர்கள் ஐந்து பேரும் எழும்பி பொக்ஸிங் போடத்தொடங்கிவிட்டால்.. ஜே. ஆர். பொக்ஸிங் பழகியவர். ஆனால் அவரால் இப்ப ஓங்கி இடிக்கேலாது...கையால் இடிக்கேலாது என்றாலும் அந்தாள் தன்ர மூளையைப் பயன்படுத்தித் தடம்போட்டு வீழுத்திவிட்டால்...சரி— அடிபடட்டும் அந்தக் காட்சியைப் பார்ப்பம் என எண்ணிய நிருபர் திடீரென ஏதோ ஒரு புதுக் கருத்துத் தோன்றியவராய் ''இல்லை. இவர்கள் என்னைச் சாட்டித்தான் தங்களுக்குள் அடிபடப் போகிறார்கள். கடைசியாக ஐந்து பேரும் சேர்ந்து என்ர தலையில் கைவைப்பார்கள். எப்படியோ இவர்களை சமாளித்து நான் தப்பிக்கொள்ள வேண்டும்'' என்ற முடிவுக்கு நிருபர் வந்தார்.

''உங்களுடைய பிரச்சினைகள் எல்லாம் எனக்கு விளங்குது. இப்ப நாங்கள் அதை விடுவம். தமிழருடைய பிரச்சினைக்கு நீங்கள் கூறுகிற சாத்தியமான வழிதான் என்ன?'' நிருபர் சிறிமாவைப் பார்த்துக் கேட்டார்.

லலித் குறுக்கிட்டு

''தமிழர் பிரச்சினையில்தான் எங்களது பதவிப் பிரச்சினை தங்கியுள்ளது. பதவிப் பிரச்சினையிலதான் தமிழர் பிரச்சினை தங்கியுள்ளது. ஆனபடியால் நீங்கள் எங்களுடைய பதவிப் பிரச்சினையை கைவிட்டுவிட்டு தமிழர் பிரச்சினையைப் பற்றிக் கதைக்கேலாது'' என்று நறுக்காகக் கூறிமுடித்தார்.

''அப்படியென்றால்...''என நிருபர் இழுத்தார்.

''கொஞ்சம் பொறுங்கோ உங்களுக்கு இன்னும் தெளிவாக விளங்கேல்லை. இப்ப நாங்கள் எல்லாருமே தமிழர் பிரச்சினையை வைத்துக் கொண்டுதான் அரசியற் போட்டியில ஈடுபட்டிருக்கிறம். தமிழருக்கு எதிராக யார் கூடக்கதைக்கிறமோ அவர்களுக்கு இலாபம் அதிகம்'' என்றார் லலித்.

''விளங்கிது நல்லா விளங்குது. ஆனால் நீங்கள் ஒன்றை உணர மறந்திட்டீர்கள். உங்கள் கண்ணுக்குத் தெரியும் அனுபவத்தோடு உங்கள் முன்னாலே ஒருவர் இருக்கிறார். அவர்தான் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். நீங்களும் அவரது சகாதானே! உங்களுக்கும் பட்டனுபவம் உண்டு. ஜே- ஆர்- தான் விரித்த இனவாத வலைக்குள் தானே வீழ்ந்து அரசியலை விட்டு விலக வேண்டி ஏற்பட்டதல்லவா?'' என்று கேட்டார் நிருபர்.

''இல்லைப்பாருங்கோ, போதைவஸ்த்தைப் பாவித்தவன் அதனைக் கைவிடமாட்டான். அந்த அனுபவம் மேலும் மேலும் அதனையே அனுபவிக்கச் சொல்லும்- நாங்கள் இனவாதத்தைப் பருகியவர்கள்- அதனை மேலும், மேலும் பருகுவோம்!''

''அப்படியென்றால் உங்கள் கலங்கள் செயலிழக்கும் ஒரு நாள்'' என்றார் நிருபர்—

பேட்டி கண்டவர்

**வெள்ளைப்புறா**

# ஜே. ஆரிற்கு வயதாகிவிட்டது

**1987** இன் முற்கூறில் முன்னாள் யாழ்மாவட்ட எம். பி திரு. யோகேஸ்வரன் யாழ்ப்பாணம் வந்திருந்தார். இங்கு கொழும்புத்துறையிலுள்ள அவரது உறவினர் ஒருவரின் வீட்டில்தங்கியிருந்தார். நவசமசமாஜக் கட்சியின் முன்னாள் யாழ் மாவட்ட அமைப்பாளர் திரு. அண்ணாமலை, யோகேஸ்வரனை அவர் தங்கியிருந்த வீட்டில் சந்தித்தார் சந்திப்பின் போது யோகேஸ்வரன் ''நான் இப்போது அரசியல் கதைப்பதில்லை'' என்று கூறினாராம். இதைப்பற்றிப் பின்னர் தனது நண்பர்களோடு கதைத்தஅண்ணாமலை, ''அரசியல் கதைப்பதில்லை என்று கூறுவது தான் மிகவும் ஆபத்தான அரசியல்'' என்று கூறினார். இப்பொழுது யோகேஸ்வரனும் இல்லை அண்ணாமலையும் இல்லை.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் சமீபத்தில் ரேடியோ அவுஸ்திரேலியாவிற்கு வழங்கிய விசேட பேட்டியின் போதும் இவ்விதம் ''நான் அரசியலில் ஈடுபடவிரும்பவில்லை'' என்று கூறியிருக்கிறார். ஆனால் அந்தப்பேட்டி முழுவதும் அவர் அரசியல் தான் கதைத்திருக்கிறார். குறிப்பாக ஜனாதிபதி பிரேமதாஸாவை மறைமுகமாக விமர்சிக்கும் அரசியல் ''இந்தியஇராணுவத்தை நாட்டிலிருந்து அவசரப்பட்டுவெளியேற்றியதின் விளைவே(அராலிவெளியில்) எமது ராணுவ உயர் அதிகாரிகளின் இழப்பாகும்'' என்றும் அவர் கூறுகிறார். சிங்களவர்கள் கொல்லப்படுவதைத் தவிர்க்கவே ஐ. பி. கே. எவ். ஐ அழைத்ததாகவும் கூறுகிறார். ஆனால் அடுத்து வந்த அரசாங்கத்தை (பிரேமதாஸாவை இவ்விதம் மறைமுகமாகக் குறிப்பிடுகிறார்.) புலிகள் ஏமாற்றி இந்தியத்துருப்புக்களை வெளியேற்றிவிட்டார்கள் என்றும் கூறுகிறார் எல்லாவற்றையும் கூறிவிட்டுக் கடைசியில் நான் அரசியலில் ஈடுபட விரும்பவில்லை என்றும் தளபதிகள் கொலையுண்டதன் பின்அரசு நடந்து கொண்ட விதம் பற்றிக் கருத்துக்கூறவோ ஆலோசனைகூறவோவிரும்பவில்லை என்றும் கூறுகிறார் ஜே ஆர். ''மிக ஆபத்தான அரசியல்'' கதைக்கிறாரா?

இரண்டு வருடங்களிற்கு முன்பு அவர் புட்டர்பத்தியிற்குப் போயிருந்தார். அங்கு அவருக்கு ஒரு தங்கச்சங்கிலி பரிசளிக்கப்பட்டது. அத்தோடு அரசியலில் மீண்டும் ஒருமுறை பிரகாசிப்பதற்கான வாய்ப்புக்கள் குறித்தும் அங்குஎதிர்வு கூறப்பட்டதாக பின்னர் கொழும்பில் பரவலாகப் பேசப்பட்டது. இப்பொழுதும் கொழும்பு அரசியலில், ஜே. ஆரின்முக்கியத்துவம் மங்கிவிடவில்லை என்றே விமர்சகர்கள் கூறுகிறார்கள். இன்று இரண்டாக உடைந்து போயிருக்கும் யு. என். பியை திரும்பவும் ஒன்றிணைக்கும் வலிமையும், கவர்ச்சியும் உடைய தலைவராக முதிய ஜே-ஆர்- இருக்கிறார் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்- குறிப்பாக பிரேமதாஸா அரங்கிலிருந்து அகற்றப்படுமிடத்து ஒன்றிணைந்த யு என், பி. யிற்கு (குறைந்த பட்சம் தற்காலிகமாகவேனும்) தலைமை தாங்கக் கூடியவராகஜே. ஆர், ஒருவரே காணப்படுவதாக அநேகமானவிமர்சகர்கள் கூறுகிறார்கள்.

ஜனாதிபதி பிரேமதாஸாவிற்கு எதிரான, ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேபனை மனுவின் மீதான விசாரணைகள் முடிவடைந்து விட்டன. தீர்ப்புக் கூறுவது சில மாதங்களிற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தீர்ப்பு அநேகமாக ஜனாதிபதியை நெருக்கடிக்குள்ளாக்கப் போகிறது என்று சில அவதானிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஜனாதிபதித் தேர்தல் செல்லுபடியற்றது என்று தீர்ப்புக் கூறப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமிருப்பதாகவும் அவர்கள் கூறுகிறார்கள். அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி திடீர்த் தேர்தல்களை அறிவிக்கக் கூடும் என்று கொழும்பிலிருந்துவரும் ஊகங்கள் தெரிவிக்கின்றன. இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பம் ஜே. ஆரிற்கு வாய்ப்பாக அமைந்து விடுமா?

ராஜீவ்- ஜே. ஆர் உடன்படிக்கைதான் பிரேமதாஸாவை ஜனாதிபதியாக்கியது. யு. என். பியின் கொயிகம வாரிசுத் தொடர்ச்சிக்குள் வராத பிரேமதாஸா, இலங்கைத்தீவின் மிகப் பயங்கரமான நாட்களில் ஜனாதிபதி வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்த நாட்களில் நாட்டில் ஜே. வி. பி. யின் கங்காரு நீதிமன்றத்தைத் தவிர வேறுபல நீதிமன்றங்களும், இயங்கின. நீதிபதிகள் பெரும்பாலும் ரவைகள் நிரப்பப்பட்ட துப்பாக்கிகளுடனிருந்தார்கள். அவர்கள் இலக்கத்தகடில்லாத வாகனங்களில் இரவில் வருபவர்களாகவும் இருந்தார்கள். எல்லாக் கொலைகளிற்குமானபழி ஜே.

ணம்செய்வதை ஜே. ஆரால் எப்படிச் சகித்துக் கொள்ள முடியும்?''

தமிழர்களால் கொல்லப்படுவதிலிருந்து சிங்களவர்களைக் காப்பாற்றுவதற்காகவே ஐ. பி. கே. எவ். ஐ இலங்கைத் தீவிற்குள் அழைத்ததாக ஜே. ஆர். கூறுகிறார். ஆனால் ஐ. பி. கே. எவ் தான் ஜே. வி. பி யின் இரண்டாவது, கிளர்ச்சிக்கு நொதியமாக இருந்தது என்று விமர்சகர்கள் கூறுகிறார்கள். உடன்படிக்கை உருவான சில நாட்களிலேயே பாராளுமன்றக் கட்டிடத்தில் ஜே ஆரின் காலடியில் ஒரு கைக்குண்டு வெடித்தது. தமி

★ **நிலாந்தன்** ★

வி. பி. யின் மீதே வீழ்ந்தது. ஆனால் ஜே. ஆரிற்கு ஆதரவான யு. என். பித்தலைவர்கள் சிலரின் கொலைகளிற்கு உட்கட்சிப் பூசலும் காரணம் என்று பரவலாகச் சந்தேகிக்கப்பட்டது. குறிப்பாக ஷர்ஷா அபயவர்த்தன, நந்தலால் பெர்ணாண்டோ, ஜே. ஆரின் மச்சாள் முறையான எலினா ஜெயவர்த்தன போன்றோரின் மரணங்கள் கங்காரு நீதிமன்றம் அல்லாத வேறு நீதிமன்றங்களின் செய்கைகள் என்றே கூறப்பட்டது. எவ்வளவுதான் காவலிடப்பட்டிருந்த போதிலும் தன்னைச் சுற்றிலுமிருந்த பலமான தூண்கள் ஒவ்வொன்றாகச் சரிக்கப்படுவதை ஜே. ஆர். கவனித்தார். அந்த நாட்களில் அவர் கிட்டத்தட்ட முற்றுகையிடப்பட்டதொரு ஜனாதிபதி போல இருந்தார். பிரேமதாஸா ஜனாதிபதி வேட்பாளராக நியமிப்பது தவிர்க்க முடியாததுஆக இருந்தது. பிரேமதாஸா ஜனாதிபதியாவது பற்றி ஜே. ஆர். என்ன நினைக்கிறார் என்று ஒரு சிங்களவரான பத்திரிகையாளரிடம் [இவர்யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஆங்கில வாரப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர்] அவருடைய நண்பர்ஒருவர் கேட்ட போது அவர் சொன்னார்: ''தான்பயணம் செய்தசொகுசுக்காரில் பிரேமதாஸா பய

ழர்களுடனான யுத்தத்திலிருந்து விடுவிக்கப்பட்ட சிங்களவர்கள், தங்களுக்குள் மோத ஆரம்பித்தார்கள். இப்பொழுது சிங்களவர்களே சிங்களவர்களைக் கொல்லும் நிலை உருவாகியது. முதலில் வடக்கிலும், கிழக்கிலும் யுத்தமுனைகள் இருந்தன இப்போது மாத்தறையிலிருந்து கொழும்பு வரை யுத்தமுனைகள் திறக்கப்பட்டன முடிவில் ஜே. ஆர். தோல்வியுணர்வோடும், இயலாமையோடும் அரங்கிலிருந்து அகல வேண்டியதாயிற்று.

நொதியத்தை அகற்றினால் ஜே.வி.பி. வீரியமிழந்து விடும் என்பது பிரேமதாஸாவிற்குத் தெரிந்திருந்தது. ஐ. பி. கே. எவ். ஐ. காட்சியிலிருந்து அகற்றியிராவிட்டால் அவரால் ஜே வி. பி. யின் முற்றுகையிலிருந்து தப்பியிருக்கமுடிந்திராது

முதலாவது ஈழப்போரில் கொல்லப்பட்ட தமிழர், சிங்களவர்களின்மொத்தத்தொகையையும் விட, ஜே வி பியின் இரண்டாவது கிளர்ச்சியின் போது கொல்லப்பட்ட அல்லது காணாமல்போன சிங்களவர்களின் தொகை மிக அதிகம் அதாவது சிங்களவர்களே கொன்ற சிங்களவர்களின் தொகை தமிழர்களுடனான போரில் கொல்லப்பட்ட சிங்களவர்களின் தொகையைவிட அதிகம் தமிழர்களிடம் இருந்து சிங்களவர்களைக் காப்பாற்றியதாகக் கூறும் ஜே. ஆர். சிங்களவர்களிடம் இருந்து சிங்களவர்களைக் காப்பாற்ற முடியாமல் போனதிற்கு யாரைப் பழி சொல்லப் போகிறார்? கறுப்புப் பூனைகளின் தந்தை நானல்ல என்று நிரூபிக்க அவர் முயலலாம் எனினும் ஒரு தசாப்த காலத்திற்கு மேலான யு.என் பி. ஆட்சி சிங்களவர்களுக்குத் தந்தவை தீராத யுத்தமும் கறுப்புப் பூனைகளும் தான் என்ற குற்றச்சாட்டிலிருந்து அவர் தன்னை விலக்கிக் கொள்ள முடியுமா? எந்த யு. என் பி. கட்சி ஆட்சியில் நீடித்திருக்க வேண்டுமென்பதற்காக அவர்தனதுவாழ்நாள் முழுதும் சிறிதளவு தியாகங்களும் பெருமளவு சூழ்ச்சிகளும் செய்தாரோ அதே யு என் பி. கட்சி இரண்டு துண்டுகளாக உடைந்துபோனதை முதிய ஜே ஆர் பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதாயிற்று 70 களில் அவர் உருவாக்கப்போவதாககூறியமேற்கத்தையபாணி ஐந்து நட்சத்திர ஜனநாயகம் அதன்உச்சவளர்ச்சியில் இன்று தம்மதுவீபத்தை கறுப்புப் பூனைகளை உடைய ஒரு தீவாக மாற்றியிருக்கிறது, அவரது நண்பர் லலித் குடும்பத்தோடு தற்காலிகமாக நாட்டை விட்டு அகன்றதிற்கும் உயிராபத்துக்கள் பற்றிய அச்சமே காரணம் என்று கூறப்படுகிறது. அவரைப் போன்ற ஓய்வு பெற்ற அரசியல் வாதிகள் பலரும் கொழும்பிலுள்ள பத்திரிகையாளர்களும் பத்தி எழுத்தாளர்களும் இன்று அபிப்பிராயங்களைக் கூற முன்பு கறுப்புப் பூனைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. கடந்த மாதம் தந்திரிமலை விகாரையில் தலைமைப் பிக்கு கொல்லப்பட்ட சம்பவமும் கறுப்புப்பூனைகள் பாணியிலானதே என்று கூறப்படுகிறது. இப்போதைக்கு கறுப்புப் பூனைகளற்ற தம்ம துவீபத்தை யாருமே கற்பனை செய்வது கடினம். ஜே. ஆரிற்கு வயதாகி விட்டது. ஆனால் கறுப்புப் பூனைகள் இளமையோடும், வலிமையோடும் இருக்கின்றன.

# "பண்பாட்டு மௌனம் கலைந்து உண்மையை நோக்க வேண்டும்"



★''என்னால் எப்படி நடிகனாக முடிந்தது'' இந்தக் கேள்விக்கு இதுவரைஎனக்குச் சரியான விடை தெரியவில்லை. எங்கள் குடும்பத்தில் நாடகச் சூழல் எதுவும் இல்லை. என் பெற்றோர் நாடகம், சினிமாப் பக்கம் தலைவைத்துப்படுத்ததில்லை. வீட்டுக் கட்டுப்பாட்டை உதறி எறிந்து படம் பார்க்கவும் தைரியமில்லை. யாழ். இந்துக் கல்லூரியில் படித்த போது ஒரு கல்விச் சுற்றுலா போனோம். அது 1948 இல் அப்போதுதான் முதன் முதலாகச் சினிமா பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது.

★ எனக்கு விருத்தெரிந்தபருவம் முதலாய் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம் தீபாவளி, வருடப்பிறப்பில் நாடகம் போடுவது வழக்கம். எங்கள் பக்கத்து வீட்டுக்கு ஒரு கிழவன் வந்துபோவார். அவரைப்போல் நான் பாவனை செய்து பேசியதினாலோ என்னவோ, நாடகத்தில் நடிக்கும் படி என்னைக் கூப்பிட்டனுப்பினார்கள். 1950 இல் விதானையார் செல்வரெத்தினத்துடன் (காமிக் செல்வரெத்தினம்) விகடமான பாத்திரத்தில் நடித்தேன். அது தரகர் பாத்திரம். தொடர்ந்தாற்போல் நான் தரகர் பாத்திரம் தாங்கி நடித்ததால் அது ஒரு வாடிக்கைப் பாத்திரமாக மாறியது. இயல்பாகவேமனித சம்பவங்களினூடே நடத்திச் செல்லும் நாடகங்களிலே நடித்த எனக்கும் விதானையாருக்கும் 'ஸ்கிரிப்ட்' இருக்காது. ஆனால் மற்றவர்களுக்கு இருக்கும். நாங்கள் பலமுறை ஒத்திகை பார்ப்போம். அதனால் எமது சொல்லாடலிலும் நடிப்பிலும் கலகலப்பற்ற இறுக்கம் ஏற்பட்டு விடும். 1958 இல் கலையரசு சொர்ணலிங்கத்துடன் தொடர்பு உண்டாகியது. பி. எஸ். இராமையாவின் ''தேரோட்டி மகனில்'' நான் அருச்சுனனாக நடித்தேன். கலையரசு கர்ணன் பாத்திரத்தில் தோன்றினார். அவருடன் சேர்ந்து மூன்று நாடகங்களில் நடித்தேன். இது எனக்கு ஒரு சுவாரசியமான அனுபவம்.

முப்பது வருடங்களுக்கு மேலாகத்தமிழ் நாடக உலகில் வாழ்ந்துவரும் குழந்தை ம. சண்முகலிங்கம் (வயது 61) தமிழ் ஈழத்தின்முன்னணிக்கலைஞர்களில் ஒருவர். பெருமைப்படக் கூடிய நடிகர். இளைப்பாறிய ஆசிரியரான இவர், யாழ். பல்லைக் கழக நுண்கலைப் பிரிவில் பணியாற்றுகிறார்.

அந்தக் காலத்தில் சினிமாப் பாணியில் நடிப்பது தான் வழக்கம். சினிமாவைப் பார்த்து எத்தனைபேர் நடிகரானார்கள். இந்த விஷயத்தில் நானும் விதானையும் வித்தியாசமானவர்கள். யாழ்ப்பாணத் தமிழிலே நாங்கள் பேசி நடித்தோம் 'இந்தியத் தமிழில்' பேசி சினிமாப் பாணியில் நடிப்பது எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. சுருங்கச் சொன்னால் நாங்கள் வேர்களை உதறிவிடவில்லை. இந்த விஷயத்தில் கலையரசிடம் ஒரு களைகட்டிய இறுக்கம் இருந்தது. எழுபதுகளில் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் இரண்டு வருடங்கள் நாடகம் மற்றும் அரங்கியல் கற்கை நெறியை முடித்த பிறகு தான் பிரஞ்ஞை பூர்வமாக எதையும் ஆர்வத்துடன் செய்யும் துணிவு வந்தது.

இருபத்தைந்து முப்பது வருடங்களுக்கு முன் மேடையேற்றப்பட்ட நாடகங்கள்போல் இப்போதும் நடிக்கப்படுகின்றன. பல்கலைக்கழக அரங்கம் 1970 இல் நடிகர் ஒன்றியம், 1978இல் நாடக அரங்

உரையாடல்தொகுப்பு

**- மதன் -**

கக் கல்லூரி ஆகியன அறிவுபூர்வமாக ஆலோசித்து நாடகத்தைச் 'செய்கிற' நிலையை உருவாக்கியது. யாரும் நாடகம் போடலாம் என்ற நிலை தொடர்ந்தாலும், நாடகத்தைப் படிக்கலாம், நாடகப் பட்டறை மூலம் பயிற்சிபெறலாம்.

என்ற நிலையை நாடக உல

(6ஆம்பக்கம் பார்க்க)

# 84 கோடி ரூபா செலவில் "மினி" உலகம்;

# 2 வருடம் வாழ 8 விஞ்ஞானிகள் தயாராகின்றனர்

**1992** ஆம் ஆண்டின் இறுதியில் காற்றுப் புகாத கண்ணாடிக் கூண்டுக்குள் புகுந்து கொண்டு வெளியுலகுடன் உள்ள தொடர்புகளையெல்லாம் அறவே துண்டித்துக் கொண்டு, இரண்டு ஆண்டு காலம் அங்கேயே வசித்து விட்டு பிறகு வெளிவரத் திட்டமிட்டிருக்கிறார்கள் எட்டு விஞ்ஞானிகள்.

அந்த இரண்டு ஆண்டு காலத்தில் அவர்கள் சாப்பாட்டுக்கு என்ன செய்யப் போகிறார்கள்? குடிதண்ணீருக்கு என்ன செய்யப் போகிறார்கள்? காற்றுக்கு என்ன செய்யப்போகிறார்கள்? இவ்வாறாகக் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ள நிலையில், 'ஸ்டொக்' செய்து கொண்டு கையோடு எடுத்துச் செல்லப் போகிறார்களா என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது.

ஆனால் அதுதான் இல்லை; பிறகு உயிர் வாழ்வது எப்படி? சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் நாம் வசிக்கும் இந்த பூமியைப் போல இயற்கைச் சூழலுடன் கூடிய ஒரு தனி உலகத்தையே அந்தக் கண்ணாடிக் கூண்டுக்குள் உருவாக்கி அந்தத் தனி உலகத்தில் தான் குடியேறப் போகிறார்கள் அந்த விஞ்ஞானிகள்.

அவர்கள் குடியேறப்போகும் அந்தத் தனிஉலகத்தில் மலை, கடல், மரங்கள், புழு, பூச்சி, நுண்ணுயிர்கள், மனிதர்கள் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களும் இருக்கும். வயல் இருக்கும்; காற்று வீசும்; மழையும் பெய்யும்;

தன்னிறைவுடன் கூடிய இந்தத் தனி உலகத்தை உருவாக்குவதற்காக விஞ்ஞானிகள் தேர்ந்தெடுத்துள்ள இடம் வட அமெரிக்காவில் உள்ள அரிசோனா பாலைவனம். அங்கே சாந்தா கடோலினா மலையடிவாரத்தில் இரண்டரை ஏக்கர் நிலப்பரப்பில் இந்த கண்ணாடிக் கூண்டை அமைத்து வருகிறார்கள். மொத்தம் எழுபது இலட்சம் கன அடி இடத்தை இந்தத் தனி உலகம் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும்.

முழுமையான இந்த 'மினி' உலகத்திற்குள் இவ்வருட இறுதியில் நான்கு ஆண்களும், நான்கு பெண்களுமாக மொத்தம் எட்டு விஞ்ஞானிகள் நுழையப் போகிறார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் வல்லுனர்கள். இந்த 'மினி' உலகத்திற்கு இவர்கள் சூட்டியுள்ள பெயர் -

பையாஸ்ஃபியர் II (Biosphere-II)

ஒரே ஒரு இன்றியமையாத பொருளுக்கு மட்டுமே இவர்கள் வெளியுலகத்தை நம்பியிருக்கிறார்கள். அதுதான் சூரிய வெளிச்சம். அது தங்கு தடையின்றிக் கிடைத்து வர வேண்டும் என்பதற்காகத் தான் கண்ணாடிக் கூண்டு. இந்த ஆராய்ச்சித் திட்டத்திற்குப் பிடிக்கும் செலவு 33 லட்சம் டொலர். அதாவது, கிட்டத்தட்ட (84 கோடி ரூபா) செலவு முழுவதையும் ஒரு பணக்கார அமெரிக்கர் ஏற்றார்.

இந்தத் திட்டத்தின் ஒவ்வொரு நுணுக்கமான அம்சங்களையும் ஆராய்ந்து அதற்கு வேண்டிய பொருள்களையெல்லாம் துல்லியமாகக் கணக்கிட்டு பட்டியல் போட்டு சேகரித்தும் வைத்து விட்டார்கள்.

உதாரணமாக இந்த உலகத்திற்குள் இவர்களுடன் குடியேறப்போகும் இரண்டு சிறிய பறவைகளின் சாப்பாட்டுக்கு 3200 மலர்கள் தேவையென்பதைக் கண்டறிந்து, அதற்குத் தேவைப்படும் செடிகளை ஏற்கனவே பயிர் செய்து விட்டார்கள்.

உலக நிலப்பரப்பில் எவ்வளவு கடற்பரப்பு இருக்கிறது என்பதை அடிப்படையாகக் கொண்டு தங்களுடைய 'மினி' உலகத்திற்கு 35 அடி அகலத்திற்கு ஒரு மினி கடல் அமைத்திருக்கிறார்கள். 85 அடி உயரத்திற்கு வான வெளியை அமைத்திருக்கிறார்கள்.

பாலுக்காக ஆபிரிக்க குள்ள வெள்ளாடுகள், இறைச்சிக்காக வியட்நாம் பன்றிகள், தென்னமெரிக்க காட்டுக் கோழிகள், விரைவில் பல்கிப் பெருகக்கூடியதிலாபியா என்ற ஆபிரிக்க மீன்கள், கோதுமை, நெய், சோயா, மொச்சை, உருளைக்கிழங்கு, பழவகைகள், புல், பூண்டுகள் போன்ற நூற்றுக்கு மேற்பட்ட தாவரங்களை இந்த 'மினி' உலகிற்குள் வளர்க்கப் போகிறார்கள்.

''நாங்கள் நிச்சயமாக பூச்சி கொல்லி மருந்துகளை எடுத்துச் செல்லப் போவதில்லை. ஏனெனில் இந்த மினி உலகிற்குள் கழிவுப் பொருள்கள் எல்லாம் உருமாற்றம் பெற்று மீண்டும் நாங்கள் பயிர் செய்யும் உணவுப் பொருள்கள் மூலம் எங்கள் உடலுக்குள்ளேயே போகும் அபாயம் இருப்பதால் பூச்சிகொல்லி மருந்தைப் பயன்படுத்த மாட்டோம்'' என்று இந்த எட்டு விஞ்ஞானி ஆராய்ச்சியாளர்களில் ஒருவர் தெரிவித்தார்.

இங்கு வாழப் போகும் எட்டுப் பேருக்கும் நாள்தோறும் தலைக்கு 2364 கலோரிதேவைப்படும். அதற்கு அவர்கள் 125 கிராம் கோழி இறைச்சி அல்லது மீன், நான்கு கோப்பை பால், 360 கிராம் தானியங்களும், கீரை வகைகளும் என்று அவர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு விளைவுகள் கிடைப்பதற்கே சாகுபடி மற்றும் கால்நடை, மீன் வளர்ப்புத் திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள்.

இவர்கள் குடியிருப்பதற்கு நான்கு அடுக்குமாடி கட்டிடம் ஒன்றை எழுப்பியுள்ளார்கள். இந்த எட்டுப்பேருக்கும் அதில் தனித்தனியாக குடியிருப்பு வசதிகள் உண்டு. இது அசல் உலகத்தைப் போலவே உருவாகி வருகிறது. 40 அடி சரிவான நிலமட்டத்தில் முதலில் கடல், பிறகு தரை, பிறகு மலை என்ற வரிசையில் அமைக்கப் பட்டிருக்கின்றது. அப்போது தானே இந்த குட்டிக் கடலின் நீர் சூரிய வெப்பத்தால் ஆவியாகி மலையுச்சியை எட்டி, அங்கே மேகமாக மாறி மழை பெய்து வேளாண்மை செய்ய முடியும்.

இங்கு உயிரோட்ட சுழற்சி இயற்கையாகவே நடைபெறும் செடிகொடிகள் வெளிப்படுத்தும் பிராணவாயுவை விஞ்ஞானிகள் எட்டுப்பேரும், மிருகங்களும் சுவாசித்து வாழ்வார்கள். அவர்கள் வெளிப்படுத்தும் கரியமில வாயுவை செடி கொடிகள் பயன்படுத்திக் கொண்டு உயிர்வாழும். மனிதர்கள் விலங்குகள் வெளிப்படுத்தும் கழிவுப் பொருள்கள் செடி கொடிகளுக்கு உரமாக பயன்படுத்தப்படும். இதைத்தவிர மீன்களுக்கு தேவைப்படும் பாசி நுண்ணுயிர்களும் இந்த கழிவுப் பொருள்களில் இருந்து கிடைக்கும்.

மிகுந்த தன்னம்பிக்கையுடன் புது உலகில் குடியேறப்போவது எட்டுப்பேர்தான் என்றாலும் அதற்காகத் தங்களை தயார்படுத்தி வருபவர்கள் பதின்மூன்றுபேர். இந்த பதின்மூன்று பேரில் ஏழு பேர் அமெரிக்கர்கள். இருவர் ஜேர்மனியர்கள். ஒருவர் பெல்ஜீயம் நாட்டைச் சேர்ந்தவர். ஒருவர் அவுஸ்திரேலியர். இருவர் பிரித்தானியர்.

இந்த ஆராய்ச்சி பூரண வெற்றியளிக்கும் பட்சத்தில் சந்திரனிலும், செவ்வாயிலும் மனித குடியிருப்பு கொலனிகளை அமைத்து உலகின் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம் என நம்பப்படுகிறது.

---

## 1-ம் ஆண்டு
## எம்உணர்வில்உறையும்உறவு



### 2-ம் லெப்டினன்ட் டெனி

செல்வராசா சுதர்சன் (கண்ணன்)

அன்னைமடியில் சேயாக 13-06-1975 | மணலாற்று மண்ணில் மாவீரனாக 02-09-1991

திதி: 21-08-1992

எம் மனையில் பிறந்து
மீசாலைப் பதியில் வளர்ந்து
மணலாற்று மண்ணில் தவழ்ந்து
தாயக மீட்பில் மடிந்த
பாசம் மிகு டெனியே
உரிமைக்காக உயிரைத் தந்து
எம் முணர்வில் உறையும் உறவே,
உன் தியாகம் வாழும்,
உன் சரித்திரம் நிலைக்கும்,
இலட்சியப் பாதைக்கு ஒளியூட்டும்
உம்மிதய தாகம் விரைவில் தணியும்
விடியலில் இங்கோர் வழி பிறக்கும்
அன்று எம்மிதயம் கூட
உன் பெயரை உச்சரிக்கும்
அன்று எம் கண்கள் கூட
உன் கல்லறை மீது
கண்ணீர்ப் பூக்களைத் தான் சொரியும்

இவரது 1 ஆம் ஆண்டு திதி அன்னாரின் இல்லத்தில் 21-08-92 இன்று (வெள்ளிக்கிழமை) நடைபெறும் இதில் சக போராளிகள் உற்றார் உறவினர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

துவாரகன் வீதி,
வாளகையடி,
மீசாலை.

உன்னையே நினைத்திருக்கும்
அன்பு அப்பா, அம்மா,
தம்பிமார், தங்கைமார்
உற்றார், உறவினர், நண்பர்கள்.

(3050)

---

## பண்பாடு...

கினர் புரிந்து கொண்டிருக்கின்றனர் இப்போதெல்லாம் க.பொ.த (உயர்தரம்), பல்கலைக்கழகம், வடமாகாண சங்கீத சபைப் பாடவிதானங்களில் ஒரு பாடம் என்ற நிலைக்கு நாடகம் வந்திருப்பது ஒரு ஆரோக்கியமான சூழ்நிலை பன்முகப்பட்ட தாக்கங்களினால் புதிய உத்திகள் கையாளப்படுகின்றன. மண் சுமந்தமேனியர், தெருவழி அரங்கு (தெருக்கூத்து) நாடகமான மாயமான் ஆகியன ஒரு புதிய தேடலைத் தோற்றுவித்தன.

★ நாடகத்தில் பல வடிவங்கள், மோடிகள் உள்ளன.சமூகப்பார்வை, அரசியல், கலையம்சம், ஜனரஞ்சகத்தன்மை, கற்பனைத்திறன் ஆகிய இன்னோரென்ன அடிப்படையில் நாடகத்தில் பலமோடிகள் உள்ளன. சிருங்கார ரசம் மேலோங்கித் தோன்றும் நாயக—நாயகி பாவ நாடகம், ராஜா-ராணி நாடகம், முன்பு போடப்பட்ட சமூகநாடகங்களும் நாடகங்கள்தான். அந்தந்த வகைக்குரிய மோடியை அறிந்து தயாரிக்கப்படும் நாடகங்கள் சோடை போகாது பழைய நாடகம் புதிய நாடகம் என்று பிரிப்பதில் எனக்கு நம்பிக்கையில்லை.

★ ஆண்டு ஒன்று முதல் ஆறு வரையிலான பாடவிதானத்தில் நாடகத்துக்கு நல்ல இடம் தந்து உயிரூட்டியிருக்கிறார்கள். பாட விதானத்தில் பேச்சுப்பயிற்சி, உடல் அசைவு, மூச்சுப்பயிற்சி, கூட்டு முயற்சி ஆகியன உள்ளன எமது கல்வி முறையில் இவற்றைப் போதிப்பதற்கான பயிற்சி ஆசிரியர்களும் இல்லை ஆடல்,பாடல்-பரதமும் சங்கீதமும் மூலம்தான் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் மாணவர்களை அணுகுகிறார்கள். சுருங்கச் சொன்னால் ஆக்க நாடகம் (Creative Dramatics) பற்றித் தெரியாத நிலை.

★ பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சிக்கு முக்கியமாக உதவுவது சுதந்திரமான இயக்கமும் அனுபவமும், சிந்தனையுமாகும். இவற்றை நாடகக் கல்வி மூலம் பெறலாம். நாடகக்கல்வி மூலம் மாணவன் தன் கட்புலன் செவிப்புலன் மற்றும் உடல் அசைவுகளை (Kineticeffect) விருத்தி செய்து கொள்ளலாம் உடல் உளக் குறைபாடுகள் நீங்கவும் நாடகம் உதவுகிறது வீட்டுச் சூழலில் அடக்கப்பட்ட உணர்வுகள் வகுப்பறையில் வெளிவருகின்றன இதை ஆசிரியர் அறிந்து கொண்டால் ஊமத்துக்கு இடமுண்டு ஊமம் சிறாருக்கு மன நிறைவைத்தருகிறது பிரித்தானியா அமெரிக்கா போன்ற நாடுகளில் கல்வி வளர்ச்சிக்கும், ஆளுமை வளர்ச்சிக்கும் நாடகம் நெடுங்காலமாக ஒரு பாடமாகக் கருதப்படுகிறது. ஆனால் ஆரம்ப வகுப்புகளில் பாடவிதானத்தில் நாடகமிருந்தும் இங்கு கற்பிப்பதற்கு ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கப்படுவதில்லை. இந்நிலை மாணவர்களை எங்கே கொண்டு செல்கிறது? எங்கே என்பது கடவுளுக்குத்தான் தெரியும்.

★ என்னைப் பொறுத்த வரையில் நான் நாடகங்களை எழுதும் ஆசிரியன் அல்ல. வேறு வழியில்லாமல் நான் நாடகங்களை எழுதுகிறேன். யாழ்ப்பாணத்தில் நெறியாளர், நடிகர் உருவாகிய அளவிற்கு நாடக எழுத்தாளர்கள் உருவாக இல்லை. எமது எழுத்தாளர்கள் நாடகங்கள் எழுதாமல் இருப்பது பெரியகுறை. அந்தத் துறையில் எமது மூத்த எழுத்தாளர்கள் பரீட்சார்த்த முயற்சிதானும் செய்யவில்லை அன்ரன் செக்காவ், பேர்ட்டல் பிரெஷ்ட், பெக்கற், பி.எஸ். இராமையா போன்றவர்கள் புனைகதை எழுத்தாளர்களாகவும், சமகாலத்தில் நல்ல நாடக ஆசிரியர்களாகவும் இருந்திருக்கிறார்கள்.

★ நாடகங்கள் சத்தியத்தை வெளிப்படுத்துவதாக அமைய வேண்டும்.ஒருவரின் அனுபவம் உள்ளத்தில் ஊறி வருவதாக இருந்தால் புதிய அர்த்தங்களும், புதிய பரிமாணங்களும் ஏற்பட இடமுண்டு. இது அனைத்துக் கலைகளுக்கும் பொருந்தும். நாடகம் எழுதுவது என்பது மாலை கோர்க்கும் விவகாரம் அன்று. கல்வெட்டுப் பாடுவதுபோல் ஒரு சட்டத்துக்குள் பொருத்த முடியாது. கல்வி மூலம் நாடக எழுத்தாளனை உருவாக்க முடியாது. கல்வி நெறிப்படுத்துவதற்கு உதவும். உலக இலக்கியங்களுக்கு நமது கதவைத் திறந்து விட வேண்டும். ஆங்கில நாடகஆசிரியர் பேனார்ட்ஷா சேக்ஸ்ப்பியர்,மௌளியே போன்றவர்கள் தமக்கு உத

(2 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் ராணுவத்தின் யுத்த தந்திரோபாயம்; புலிகளின் அதிரடியால் ஆட்டம்கண்டுள்ளது

யாழ்.குடாநாட்டில்பெரும் தாக்குதல் ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இதற்கென பெருமளவு இராணுவத் தினரும் ஆயுதத்தளபாடங்களும் வடக்கே குவிக்கப்பட்டுள்ளன. விமானப்படையும் கடற்படையும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதோடு, தாக்குதல் நடவடிக்கைகளிலும் ஈடுபடத் தொடங்கியுள்ளன.

லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவும், மேஜர் ஜெனரல் விஜய விமலரெட்னா உட்பட ஒன்பது அதிகாரிகள் கொல்லப்படாது இருந்திருக்குமானால் இத் தாக்குதல் நடவடிக்கை சில வேளை கடந்த வாரமே ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம் என ஊகிப்பதற்கும் இடமுண்டு.

இந்நிலையில் சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர், தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக அறிவித்த கிழக்கு மாகாணத்தில் புலிகளுக்கு எதிரான புதியபோர் யுக்திகளை வகுக்கவேண்டிய நிர்ப்பந்தம் சிறிலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ளது.

ஈழப்போர் ஆரம்பித்ததில் இருந்து சிறிலங்கா அரசியல் தரப்பும், இராணுவத்தரப்பும் கிழக்கு மாகாணத்தைப் பொறுத்து விசேட கவனம் செலுத்திவந்தன. ''புலிகளின் தலையாக யாழ்ப்பாணம் கருதப்படுமானால் அதன் இருதயமாக கிழக்குக் கருதப்படுகின்றது'' என ஒரு சிங்கள அரசியல் விமர்சகர் குறிப்பிட்டார். ''ஈழத்தை அழிக்க வேண்டுமாயின் ஈழம் என்ற கோட்பாட்டை அழிக்க வேண்டும்'' என இராணுவத்தளபதிலெப். ஜெனரல் சிசில் வைத்திய ரெட்னா தெரிவித்தார்- அதாவது ''கிழக்கைக் கட்டுப்பாட்டில் கொண்டுவருதல் ஈழத்திற்கான அடிக்கற்கள் அகற்றப்பட்டு விடும்'' என்பது சிறிலங்கா இராணுத்தரப்பினதும், அரசியல் தரப்பினதும் சிந்தனை ஓட்டமாகும்-

## கிழக்கில் இராணுவத்தின் தந்திரோபாயம்

இதன் அடிப்படையில் கிழக்கை தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள சிறிலங்கா இராணுவம் இரு அடிப்படைத் தந்திரோபாயங்களைக் கைக் கொண்டது- ஒன்று வடக்கிற்கும், கிழக்கிற்கும் இடையில் உள்ள விநியோக வழிகளைக் கட்டுப்பண்ணுதல் இரண்டு, ஒருவலைப் பின்னல் போன்ற அமைப்பொன்றின் மூலம் தரைக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தல் ஆகும்.

விநியோக வழியைத் துண்டித்தல் என்ற நோக்கில் மணலாற்றுப்பகுதியில் ஓர் இராணுவ வேலியை அமைப்பதன் மூலம் வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி பெருமளவு போராளிகள் நகர்வையும், ஆயுத வெடிப் பொருள்களின் நகர்வையும் கட்டுப்பண்ண திட்டமிடப்பட்டது- இதன் அடிப்படையில், கஜபாகுபுரவிற்கும் கொக்குத்தொடுவாய்க்கும் இடையில் ஓர் இராணுவ வேலியை அமைத்துக் கொண்டது. ஆனால், இதில் 'பொட்டுகள்' இருக்கத்தான் செய்தன. இதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக கிழக்குக் கரையோர ரோந்து நடவடிக்கையை அதிகரித்து வடக்கு கிழக்கு கடல் வழிப் பாதையையும் கட்டுப் பண்ணத் தீர்மானித்தது. இதற்கென ஆழம் குறைந்த கடற்பரப்பில் செல்லக் கூடிய அதிவேக விசைப்படகுகளும் கொள்வனவு செய்யப்பட்டன.

அடுத்த அம்சமான தரைக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. தரையைக் கட்டுப்படுத்தும் திட்டம் உருவாக்கப் பட்டபோது தனியான இராணுவத்தினர் மட்டும் கருத்திற் கொள்ளப்படவில்லை தரைக்கட்டுப்பாட்டில் விமானப்படை, கடற்படை, விசேட பொலிஸ் அதிரடிப் படையினர், பொலிசார் உட்பட சிங்கள முஸ்லிம் ஊர்காவற் படையினர் சிங்கள இராணுவத்துடன் இணைந்துள்ளதமிழ் குழுக்கள் என்பனவும் கருத்திற் கொள்ளப்பட்டே திட்டங்கள் வகுக்கப்பட்டன. இதில் சிங்கள, முஸ்லிம் மக்களின் ஒத்துழைப்பும் முழுமையாகப் பெறப் பட்டன.

இவ் ஆயுதக்குழுக்கள் யாவற்றையும் ஒன்றுதிரட்டி வகுக்கப்பட்ட திட்டத்தில் இவற்றைஒருங்கிணைக்கும்பிரதான சக்தியாக இராணுவம் இருந்தது. அதாவது இராணுவ முகாம்கள் —காவலரண்கள்— கிராமங்களிலுள்ள ஆயுதம் தாங்கிய ஊர்காவற் படையினர் ஏனைய ஆயுதப்படையினர் முகாம்கள், நிலையங்கள் என்பனவற்றின் ஒருங்கிணைப்புச் சக்தியாக இராணுவம் இருந்தது. அதாவது உருவாக்கப்பட்ட மையங்களை இராணுவம் இணைத்தது. இவ் ஒருங்கிணைப்பு நடவடிக்கையை ரோந்து நடவடிக்கையின் மூலம் மேற்கொண்டது.

ஒப்பீட்டு ரீதியில் இந்திய இராணுவம் மேற்கொண்டதைப் போன்ற ஒரு வலைப் பின்னல் அமைப்பே பேணப் பட்டது. ஆனால், இந்திய இராணுவம் மேற்கொண்ட இவ் அமைப்பைவிட இது இறுக்கமானது என்று கூடக்கூறலாம். ஏனெனில் இந்திய இராணுவமும், இந்தியறிசேவ் பொலிசாருமே இவ் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். ஆனால், இதில் பல்வேறு ஆயுதபாணிகள் மட்டுமல்ல, சிங்கள மக்களும், முஸ்லிம் மக்களும் இணைக்கப்பட்டிருந்தார்கள்.

## தவறான கணிப்பீடுகள்

இரண்டாம் கட்ட ஈழப் போர் ஆரம்பித்து இரண்டு மாதங்களின் பின்னர் கிழக்கில் விடுதலைப் புலிகள் ஒடுக்கப்பட்டு விட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்தன. அதன் பின்னர் இடையிடையே புலிகளின் அதிரடித் தாக்குதல்கள் நடைபெற்றபோது கிழக்கில் சிறிதளவு எஞ்சியிருக்கும் விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடத்துவதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் இவ்வருடத்தின் ஆரம்பத்தில் அதிகரித்த தாக்குதல்களையும், இழப்புக்களையும் தொடர்ந்து கிழக்கில் புலிகள் முற்றாகப் பலமிழக்கவில்லை என்பதை இராணுவத் தளபதிகள் ஏற்றுக் கொள்ளவேண்டியநிர்ப்பந்தம் ஏற்பட்டது. இவ்வருடத்தின் முற்பகுதியில் திருமலை மாவட்டத்தில் கடமை புரிந்த கேணல் தரத்திலுள்ள சிறிலங்கா இராணுவ அதிகாரி திருமலை மாவட்டத்தில் புலிகள் சில நூற்றுக்கணக்கில் இருப்பினும் திட்டமிட்டு, தாம் விரும்பிய இடத்தில், துல்லியமாகத் தாக்குதல்களைச் செய்யக் கூடிய நிலையிலேயே உள்ளனர் என வெளிப்படையாகவே ஏற்றுக்கொண்டார்.

## புலிகளின் யுக்திகள்

அதிலும் அண்மைக் காலத்தில் அதிகரித்த தாக்குதலினால் இராணுவத்தினரின் இழப்பு என்றுமில்லாதவாறு அதிகரித்தது - புலிகளின் ஒவ்வொருதாக்குதலும் இரட்டை எண்ணிக்கையில் இராணுவத்தைப் பலியெடுத்தது- ஒவ்வொரு அதிரடித் தாக்குதலிலும் இராணுவத்தினரின் இறப்பு 10 - 40 வரையில் வேறுபடுவதாக இருந்தது-

இத்தாக்குதலில் பெரும்பாலும் ரோந்து அணிகளே சிக்கின- ஆனால் இவை எதிர்பாராத இடத்தில், எதிர்பாராத வகையில் தாக்குதலுக்கு இலக்காகின- சில அணிகள் முகாமிலிருந்து 100-200 யார் இடைத் தூரத்திற்குள் தாக்கப்பட்டன- சில ரோந்துஅணிகள் இரண்டு காவலரண்களுக்கு இடையில் தாக்கி அழிக்கப்பட்டன- சிலவேளைகளில் காவலரண்களும் தாக்கப்பட்டன-

புலிகளின் இவ் அதிரடித் தாக்குதல் தந்திரோபாயம் இராணுவத்தினருக்கு அதிசயமானவையாகவும், அச்சம் ஊட்டுபவையாகவும் இருந்தன- இவ்வாறு அச்சம் இராணுவத் தரப்பினருக்கு ஏற்பட்டதில் நியாயங்கள் இல்லாமலும் இல்லை- ஏனெனில் புலிகளின் அதிரடியில் சிக்கிய இராணுவரோந்து அணிகளில் சில முழுமையாகவே அழிந்தன.அவற்றில் சிக்கித் தப்பிய ஒரு சிலர் கூட படுகாயமடைந்த நிலையிலேயே தப்பினர். அதேவேளை, புலிகள் கடைப்பிடிக்கும் யுத்ததந்திரோபாயமோ, இதுவரைஉலகில்கடைப்பிடிக்கப்பட்டு வந்ததாக்குதல் தந்திரோபாயங்களில் இருந்து மாறுபட்டவையாகவும், துணிச்சல்மிக்கசெயலாகவும் இருந்தன. இதனைப் போர் அறிவு கொண்டசிறிலங்காஇராணுவ அதிகாரிகளே வெளிப்படுத்தினர்.கிழக்கிலும், வன்னியிலும் புலிகளால் மேற் கொள்ளப்படும் தந்திரோபாயங்கள் இராணுவ ஏடுகள்எதிலும் இல்லை எனவும், இவைபுலிகளின் வெற்றிகரமான யுக்திகளுக்கு எடுத்துக்காட்டாகவுமுள்ளதாகவும் இவ் அதிகாரிகள் தெரிவித்துள்ளதோடு, புலிகளால் மேற்கொள்ளப்படும் பல இராணுவ அணிகளை இரையாக்கிய 'யூ' (U) பாணியிலான மறைந்திருந்து தாக்கும் யுக்தியிலிருந்து உயிர் தப்புவதென்பது அநேகமாகமுடியாத செயல்தான்என வும் குறிப்பிட்டுள்ளனர்.

## இராணுவத்தின் பேரிழப்புகள்

விடுதலைப் புலிகளின் இவ் அதிரடித்தாக்குதலின்விளைவு கடந்த மூன்று மாதத்தில் மட்டும் நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் பலியாவதற்கும் பலநூற்றுக்கணக்கான ராணுவத்தினர் காயமடைவதற்கும் காரணமாக இருந்துள்ளது. இந்நிலை தொடர்ந்து நீடிக்குமானால் இவ் உயிர் இழப்பையும் அங்கவீனர் தொகையையும் தாங்க முடியுமா என்பதே இன்றுள்ள கேள்வியாக எழுந்துள்ளதாகும்.

இரண்டாம் கட்ட ஈழப் போரில் சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த 8750 ஆயுதப்படையினர் காயமடைந்துள்ளனர். இதில் அநேகர் படுகாயம்அடைந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் ஊர்ஜிதப்படுத்துகின்றன. இவர்களில் 303பேர் இளநிலை அதிகாரிகளாகும். இவ்வாறான இளநிலை அதிகாரிகளின் இழப்பானது எந்த நாட்டு இராணுவத்தைப் பொறுத்தும் கவலையளிக்கக் கூடியது ஆகும். ஏனெனில் போரில் ஓர் இளநிலை அதிகாரியின் கடமை முக்கியமானதாகும். களத்தில் நின்று போரை நடத்துவபவர்களே இளநிலை அதிகாரிகள்தான். ''யுத்தங்கள் இளநிலை அதிகாரிகளின் தலைமையில்தான் வெற்றியடைகின்றது அல்லது தோல்வியடைகின்றது'' என்று முன்னாள் இந்திய இராணுவத்தளபதி குறிப்பிட்டதை இங்கு சுட்டிக்காட்டலாம்.

இந்நிலையில்தான் இராணுவத்தின்தற்போதையகிழக்குப் பிராந்திய தந்திரோபாயம் கேள்விக்குரியதாகியுள்ளது. பயிற்சி பெற்ற முன்னணிப் படையினரையும், இளநிலை அதிகாரிகளையும் தொடர்ந்தும் இழந்து கொண்டிருக்க முடியுமா என்ற கேள்வி இன்று எழுந்துள்ளது. இது சிறிலங்கா இராணுவத் தரப்பில் மட்டுமல்ல அரசியல் மட்டத்திலும், சிங்கள மக்கள் மட்டத்திலும் கேட்கப்படும் கேள்வியாக மாறி வருகிறது: இதன் அடிப் படையிலேயே புதிய தந்திரோபாயம் பற்றிச் சிந்திக்கப்படுகிறது:

**ஜெயராஜ்**

ஆனால் புதிதாக உருவாக்கப்படும் தந்திரோபாயம் இராணுவத்தினருக்கு சேதத்தை விளைவிக்காமல், புலிகளைக் கட்டுப்படுத்த கூடியவையாக இருத்தல் அவசியமானதாகும். ஆகையினால் இராணுவத்திற்கு தற்பொழுது பெரும் சேதத்தை ஏற்படுத்தும், ரோந்து நடவடிக்கை மற்றும், முகாமிற்கு வெளியுள்ள காவலரண்கள் என்பனவற்றை தாக்குதலுக்குள்ளாகாமல் பாதுகாக்குமாறு புதிய தந்திரோபாயம் அமைத்தலே அவசியமான தாகும். ஆனால் இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாக்கப்படும் புதிய தந்திரோபாயம் புலிகளை எந்தளவிற்குக் கட்டுப்படுத்தும் என்பது பெரும் சந்தேகத்திற்குரியதே. இதுவே இன்று இராணுவத்தின் முன்னுள்ள முக்கிய பிரச்சினையாகும். ★

---

சிறிஇராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி

## மீண்டும்அரசுபொறுப்பேற்க எதிர்க் கட்சிகள் வற்புறுத்து

சென்னையில் சிறிராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியைத் திரும்பவும் அரசு எடுத்து நடத்துவதற்கான சட்டமொன்றை இயற்றுமாறு தமிழக தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிக் கட்சிகள் கூட்டாக அரசைக் கேட்டுக்கொண்டுள்ளன.

நேற்று முன்தினம் சென்னையில் நடத்தப்பட்ட இக் கட்சிகளின் கூட்டத்தில் போராடிக் கொண்டிருக்கும் மாணவர்களை மாநில அரசு அடக்குமுறைக்குஆளாக்குகிறதுஎன்று குற்றம் சாட்டப்பட்டது இந்தக் கூட்டத்தில் திமுக, மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதாதளம், இந்திய பார்வோட் புளக் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்

இதேவேளை இக் கல்லூரியை அரசு பொறுப்பேற்க வேண்டும் என்று கோரிச் சென்னையில் மாணவர்கள் நேற்று முன்தினம் ஊர்வலம் நடத்தினார்கள்.

தமிழக அரசின் தலைமை அலுவலகத்துக்கு அருகே மாணவர்கள் மீதான பொய் வழக்குகளை வாபஸ் பெறுமாறு கோரி மாணவர்கள் கோஷமெழுப்பினார்கள்

சிறி இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியைஅரசுஎடுத்து நடத்த வேண்டும் என்று கோரி பதினைந்து மருத்துவ மாணவர்கள் நேற்று முன்தினம் முதல் சென்னையில் காலவரையற்ற உண்ணா விரதத்தை மேற்கொண்டு வருகின்றனர்

---

## பல்கலை. உறுப்பினராக கனகரெட்ணா தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலைப்பீட உறுப்பினராக ஏ. ஜே. கனகரெட்ணா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கல்விமான்களையும் மற்றும் துறைகளிலும் சேவையாற்றியவர்களைத் தெரிவுசெய்யும் திட்டத்தின் கீழேயே ஏ. ஜே. கனகரெட்ணா கலைப்பீட உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

ஏ.ஜே. இலக்கியத்துறையில் பெருமையாகப் பேசக்கூடிய பல சாதனைகளைப்புரிந்திருப்பதோடு, முன்னணி ஆங்கில, தமிழ்ப் பத்திரிகைகளில் ஆசிரிய பீடங்களிலும் சேவையாற்றியுள்ளார்.

ஏ. ஜே யின் பதவிக்காலம் மூன்றுவருடங்களாகும். இவர் கலைப்பீடத்தின் செயற்பாடுகளுக்கு உதவியாக இருப்பார்.

---

## கணிதப் பேராசிரியர் மீது கொலைச் சதி வழக்கு

(கொழும்பு)

ஐந்து முக்கிய பிரமுகர்களின் கொலைகளுக்கு சதி செய்ததாகவும், அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு சதி செய்ததாகவும் ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக கணிதத் துறைப் பேராசிரியர் ஒருவர் மீது சட்டமா அதிபர் திங்களன்று கொழும்பு ஹைகோர்ட்டில் குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்தார் என தெரிவிக்கப்படுகிறது.

இப் பேராசிரியர் ஒரு அதிதீவிரவாத ஜே. வி. பி. உறுப்பினர் என்று பொலிசார் வர்ணித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தனியார் பல்கலைக்கு அனுமதிக்க மாட்டோம

(கொழும்பு)

நாட்டில் தனியார் பல்கலைக் கழகம் அமைக்க ஒரு போதும் இடமளிக்கப்பட மாட்டாது என்று உயர்கல்வி அமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீட் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஹமீட் இதனைத் தெரிவித்தார்

சிறிலங்கா எதிர்க்கட்சிகள்

## கறுப்புப்பட்டி அணிந்து பாராளுமன்றம் சென்றனர்

(கொழும்பு)

கண்ணிவெடியில் கொல்லப்பட்ட பாதுகாப்புப்படை உயர் அதிகாரிகளுச்கு அரசு துக்கதினம் பிரகடனப்படுத்தாமைக்கு கண்டனம் தெரிவிக்கும் முகமாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கறுப்புப்பட்டி அணிந்தபடி கண்டன ஊர்வலம் ஒன்றை நடத்தியுள்ளனர். நேற்று ஆரம்பமாகிய பாராளுமன்றக் கூட்டத்திற்கு முன்னர் இந்த ஊர்வலம் நடைபெற்றது. கறுப்புப்பட்டி அணிந்தபடி அனைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அணிவகுத்தவண்ணம் பாராளுமன்றத்திற்குள் நுழைந்தனர். கூட்டம் முடியும்வரை கறுப்புப் பட்டியுடன் காணப்பட்டனர்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்கட்சி, லங்கா சமசமாசக்கட்சி நவசம சமாசக் கட்சி, மகாஜன எக்சஸ் பெரமுன ஆகிய எதிர்க்கட்சிகள் இவ்வாறு அரசுக்கெதிரான கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

## எதிர்க்கட்சிகள் கூட்டத்தில் பலத்த கல் வீச்சு

(கொழும்பு)

1953 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஹர்த்தால் போராட்டத்தை நினைவு கூருமுகமாக கடந்த திங்கள் மாலை கொழும்பு கிராண்ட் பாஸ் பளாமரச்சந்தியில் எதிரணியினர் நடத்திய பொதுக் கூட்டம் அடாவடித்தனங்களினாலும் கல்லெறி வீச்சுக்களினாலும் சிறிது நேரம் சலசலப்புக்குள்ளாகியது.

பொதுக்கூட்டம் ஆரம்பித்து சில நிமிடங்களில் மின்சாரம் தடைப்பட்டது கொழும்பு மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம். பி. நிமால் சிறிபால டி. சில்வா பேசிக் கொண்டிருக்கையில் மேடையை நோக்கியும் பொதுமக்கள் மீதும் கற்கள் வீசப்பட்டன.

கூட்டத்திற்கு தலைமை வகித்த கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பீட்டர் கெனமனை ஆதரவாளர்கள் மேடையில் இருந்து பாதுகாப்பாக இறக்கினர்.

தொடர்ந்தும் மேடை மீது கற்கள் வீழ்ந்து கொண்டிருந்ததினால் மேடைமீது இருந்த பலர் தலைகளில் கைகளை வைத்த வண்ணம் காணப்பட்டனர்.

சுமார் கால் மணி நேர இடைவெளிக்குப் பின் பீட்டர் கெனமன் மேடைக்குஅழைத்து வரப்பட்டு கூட்டம் நடைபெற்றதாக தெரிய வருகிறது.

ஒப்பரேசன்

தெரிவித்தார்

இந் நடவடிக்கையில் விமானப்படை, கடற்படை உதவியுடன் சிறிலங்கா இராணுவத்தினர் ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரம் மேற்குத் திசையில் முன்னேறியதாகவும் அவர் தெரிவித்தார்.


## 3-ம் ஆண்டு வீர அஞ்சலி



வீரப் பிறப்பு

14 | 06 | 1962

வீரச்சாவு

21 | 08 | 1989

**மேஜர் டயஸ் கந்தசாமி**

(யாழ், அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர்)

[மயில்வாகனம் தவராசா (ஈச்சமோட்டை)]

''அன்னியனின் அடிவருடிகளாய் வாழ்வதைவிட தாயக மண்ணை முத்தமிட்டு மாழ்வது மேலானது''

- டயஸ்

மனைவி, மகன், உறவினர், நண்பர்கள்.

[3056]

## யாழ் மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்

திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்

பால் வழங்குனர்க்கு:- தரமான பாலை வழங்குபவர்கட்கு கூடியவிலை, சகாயவிலையில் கறவையுணவு, மருந்து வகைகள்

பால் வாடிக்கையாளருக்கு:- மலிவு விலையில் தரமான பால்

கோழி வளர்ப்போருக்கு :- முட்டை இடும் கோழியுணவு, வளரும் குஞ்சு உணவு, குஞ்சு உணவு.

கால்நடை வளர்ப்போர் ரூபா 100/- செலுத்தி அங்கத்தவராகச் சேர்ந்து மலிவு விலையில் உங்கள் தேவைகளை நிறைவு செய்யுங்கள்.

[சி-4925] பதில் பொது முகாமையாளர்


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பத்மநாபா கொலை வழக்கு சுப்புலட்சுமி பிணையில் விடுதலை

(சென்னை)

பத்மநாபா மற்றும் பதினான்கு பேர் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட முன்னாள் மாநில அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி பிணையில் விடுதலை செய்யப்பட்டார்அவருடன் சுப்புலட்சுமியின் கணவர் ஜெகதீசன் வை கோபாலசாமியின் தம்பி வை. ரவிச்சந்திரன் ஆகியோரையும் பிணையில் செல்ல இந்திய உச்ச நீதிமன்றம் நேற்று அனுமதித்தது

குற்றம் சாட்டப்பட்டவர்கள் தனித்தனியாகப் 15,000 ரூபா பிணையும், அதற்கு இணையான அளவிற்கு இரு சரீதப் பிணையையும் கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கினார்.

விசாரணைக்கு அவர் சென்னைக்கு வருவதைத் தவிர சொந்தப் பாதுகாப்பிலேயே இருக்கவேண்டும் என்றும்உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த வழக்குத்தொடர்பாக முன்பு கைது செய்யப்பட்ட முன்னாள் உள்துறைச் செயலாளர் நாகராஜன், வழக்கறிஞர்கள் வீரசேகரன், மருகநாயகம் ஆகியோர் முன்பே இந்த வழக்கை விசாரிக்கும் தனிநீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டது தெரிந்ததே

பெருமளவு

உபதபால் நிலையம் உட்பட சில கடைகள் சேதமடைந்தன.

இதேவேளை காலைமுதல் மாலைவரை உலங்குவானூர்தி, சீ-பிளேன் ஆகியன மாதகல், பண்டத்தரிப்பு, மாரீசன் கூடல், பத்தமேனி, இளவாலை, விளான், முள்ளானை அளவெட்டி, மாகியப்பிட்டி ஆகிய பகுதிகளை நோக்கி சரமாரியான கலிபர் தாக்குதல்களை நடாத்தின.

இக்கண்மூடித்தனமான தாக்குதல்களுக்கு அஞ்சி வெளியேறிய மக்கள் சண்டிலிப்பாய், பண்டத்தரிப்பு, சங்கானை, மானிப்பாய் பகுதிகளிலுள்ள பாடசாலைகளிலும்,ஆலயங்களிலும் தங்கியுள்ளார்கள்.,இவர்கள் கால்நடையாகவும் வண்டில்களிலும் வந்ததை அவதானிக்க முடிந்தது. இவர்களுக்கான உணவு மற்றும் சுகாதார வசதிகளை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்டுவருகிறது. (ச)

அகதிகளை

வல்கள் கிடைத்திருப்பதாக மனுதாரர்கள் தமது மனுவில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த வழக்கு இந்த மாதம் 27 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

5 பொதுமக்கள்

படுத்தப்பட்டிருக்கிறது. இவர்களைவிட வேறும்பல அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் கூறுகின்றன.

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த பி. மகாலிங்கம்(வயது 49), துர்க்காபுரத்தைச் சேர்ந்த நளாயினி ராஜகோபால் (வயது 20), சியாமினி பாமினி (வயது 16), சுந்தன் சண்முகநாதன் (வயது 27), நடராசா தியாகராசா (வயது 14), மோகனராஜ்குமார் (வயது 22), கீ. தோமஸ் விக்டர் (வயது 23), பொ. சத்தியநாதன் (வயது 33), மாரீசன் கூடலைச் சேர்ந்த தம்பித்துரை திருக்குமார்(வயது 18), பொ. சண்முகரத்தினராசா (வயது 55), தே. விஜயபாலசிங்கம் (வயது 49), கார்த்திகேசு (வயது 20), ஞானப்பிரகாசம் அல்விஸ் (வயது 55), றஞ்சன் (வயது 24), கைலாசபிள்ளை (வயது 55), சாந்தி வரதராணி (வயது 25), அல்வின் (வயது 55), அளவெட்டி வடக்கைச் சேர்ந்த மூன்றுவயதுக் குழந்தையானசஜித்திரன், க. அரியரத்தினம் (வயது 43), இராசலட்சுமி நவரட்ணம் (வயது 49) ஆகியோர் மேற்படி பகுதிகளில் நேற்றைய தினம் நடைபெற்ற மும்முனைத் தாக்குதல்களில் பலத்த காயமடைந்துள்ளனர். இவர்களைவிட மேலும் பலர் சிறுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர் இவற்றைவிட இராணுவத்தினரின் பிடிக்குள் சிக்கியுள்ள சில பொதுமக்களும் காயமடைந்திருப்பதாக கூறப்படுகிறது. (க),(ச),(9),(11)

பத்திரிகை ஊழியர்

## மறியல்

(யாழ்ப்பாணம்)

ஒன்பது அம்ச கோரிக்கையை முன்வைத்து நேற்று முரசொலி பத்திரிகை ஊழியர்கள் மறியல் போராட்டம் ஒன்றை நடாத்தினர்.

பத்திரிகையின் நிர்வாகத்தினருக்கும் ஊழியர்களுக்கும் இடையே ஏற்பட்ட பிணக்கினை அடுத்தே இப்போராட்டம் நடாத்தப்பட்டதாகதெரிவிக்கப்படுகிறது.

## இரத்தம் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனை இரத்த வங்கியில் அனைத்துப் பிரிவு இரத்த வகைகளும் தீர்ந்து விட்டது. இரத்த தானம் செய்ய விரும்புபவர்கள் உடனடியாக மேற்படி வைத்தியசாலை இரத்த வங்கியுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (க)

யாழ்.

களை நோக்கிப் பல தடவை எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டது. இத்தாக்குதலினால் குருநகர்ப் பகுதியில் உள்ள வீடு ஒன்று தீப்பற்றி எரிந்துவிட்டது.

அதே வேளை மண்டைதீவுக் கரையோரக் காவல் அரண்களில் இருந்து யாழ். நகரக் கரையோரப்பகுதிகளை நோக்கித் தொடர்ச்சியான கலிபர் தாக்குதல்களும் நடாத்தப்பட்டது. (க) (21)

இரு படை

துடன் பலர்காயமடைந்ததாக சிறிலங்கா இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி பி.பி.ஸி. தெரிவித்தது

அராலிப்

ஒரு மணி நேரம்வரை நடைபெற்றது.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் ஆரம்பமாகிய இத்தாக்குதல்களால் மேற்படி பகுதிகளில் வாழும் ஏற்கனவே இடம்பெயர்ந்த மக்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றனர். (20), (க)

## புலிகள் வேண்டுகோள்

(குருநகர்)

மறு அறிவித்தல் வரை குடாக்கடல் பிரதேசத்தில் மீன்பிடிக்கச் செல்லவேண்டாமென நேற்று (20-8-92) தமிழீழ விடுதலைப் புலிகள் ஒலிபெருக்கி மூலம் மீனவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடலில் வைத்துப் பணயக் கைதிகளாகப் பிடிக்கும் கடற்றொழிலாளரைக் கேடயமாகப் பயன்படுத்தி எதிரி யாழ். நகரில் பிரவேசிக்கத் திட்டம் தீட்டி இருப்பதாகவும் மேற்படி வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டது (21)

செய்தியாளர்

விக்கிரமசிங்க கொடுத்த பதிலைத் தொடர்ந்து பத்திரிகையாளர் மாநாட்டை விட்டு வெளியேறினார்கள்.

எதிர்க் கட்சிகள் நடத்திய ஆர்ப்பாட்டங்கள் பற்றிச் செய்திகளைச் சேகரித்துக் கொண்டிருந்த பத்திரிகையாளர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் பற்றிய பொலிஸ் அறிக்கையொன்றை விக்கிரமசிங்கா மாநாட்டில் வாசித்தார்.

பொலிசார் கோட்டை புகையிரத நிலையத்தில் நடந்த தாக்குதல் சம்பவம் குறித்து நடத்திய விசாரணைகளும் பாராளுமன்றத்தில் பிரதமர் டி.பி. விஜயதுங்காவெளியிட்ட கருத்துக்களும் தமக்குத்திருப்தி தரவில்லை என்று பத்திரிகையாளர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

பத்திரிகையாளர்களைத் தாக்கியவர்கள் கத்திகளும், கைத்துப்பாக்கிகளும் வைத்திருந்த பயணிகளே என்று பிரதமர் பாராளுமன்றத்தில் கூறியிருக்கிறார்.

பத்திரிகையாளர் மீது நடத்தப்படும் தாக்குதல் குறித்து அரசு வெளியிடும் கருத்துக்கள் ஏற்றுக் கொள்ள முடியாதவை என சிறிலங்கா வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் லூசியன் ராஜகருணா தெரிவித்தார்.


## யாருடையது?

எமது ஸ்தாபனத்தில் நேற்று முன்தினம் ஒரு கைக் கடிகாரம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் எமது ஸ்தாபனத்திற்கு வந்து தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

**நியூ லலிதா ஜுவலர்ஸ்**

இல. 74/1 கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

(சி/4926)


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**20-08-1992**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 5266

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்

42-488, 28-1020, 24-8710, 27-6769, 28-3927, 24-4854, 44-7941, 28-9917.